668

668
4-54

உ சிவமயம்

முத்தப்பர் நூல்

அழகப்பன்

வள்ளியம்மை

★

காப்புக்கட்டுப் புதுமை,

அன்பளிப்பு.

★

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1954
MADRAS

8—11—54

ராம. மு. க. மு.

நாராயணஞ் செட்டியார்,

...பி. அழகாபுரி,

...ச்சிவல்பட்டி.

O-,1LMx9
N54
112717

உ சிவமயம்
ஜெயகொண்ட சோழீசர் துணை.

முத்தப்பர் நூல்.

ஸ்ரீ பாடுவா முத்தப்ப செட்டியார் அவர்களால்,
இயற்றப்பட்டது.

கீழச்சிவல்பட்டி, பி. அழகாபுரியிலிருக்கும்
கனம் பொருந்திய
பாடுவா முத்தப்ப செட்டியார் அவர்கள் பௌத்திரன்

மகா-ா-ா-ஸ்ரீ
ராம. மு. க.
முத்துராமஞ் செட்டியார் அவர்கள்குமாரன்

மகா-ா-ா-ஸ்ரீ
ராம. மு. க. மு. நாராயணன் செட்டியார் அவர்களால்

வெளியிடப்பட்டது.

ஜய ஆண்டு, ஐப்பசித் திங்கள், 23ம் நாள்.

112717

உ

சிவமயம்.

முகவுரை

'ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்,
ஞானகுரு வாணிபதம் நாடு.'

நம் தமிழ்நாட்டிலே, பலப்பல புலவர்கள் உதித்து, நாட்டுமக்களுக்குப் பயன்படுமாறு, பல நூல்களை இயற்றித் தந்துள்ளார்கள். அவர்களுள், நமது முத்தப்பரும் ஒருவர்.

ஞாலமாதினுயர் நயனமென்று புகழ் நாட்டு கீழைச்சிவப்பட்டியில், இற்றைக்குச் சுமார் 180 ஆண்டுகளுக்குமுன்னே உதித்தவர் நமது முத்தப்பர். தனவணிக மரபினில் ஓர் இரத்தினதீபம்போன்று பிரகாசித்தவர். தமிழ்ப் புலமையுடன், தெய்வபக்தியும் அருள்வாக்கும் பெற்றவர். அவர் ஆற்றிய நூல்கள், அன்னாருடைய கவித்திறனையும், தெய்வபக்தியையும் வெளிப்படுத்துகின்றன.

முத்தமிழ்போற்றிய வித்தகராம் நம் முத்தப்பர், தம் மரபினரோடு, பிற யாவரும் நன்மையெய்தவேண்டும், என்ற அவா உடையவர் என்பது, அன்னார்செய்த நூல்களால் தெளிவுறத் தெரிகின்றது. அவர் செய்த ஜெயங்கொண்டார் சதகச் செய்யுள்களில், இராமாயணம், பாகவதம், பாரதம் திருவிளையாடற் புராணம் முதலியவற்றின் குறிப்புகளுடன், பல நீதிகளைக் குறிக்கோளாகக் கொண்டு பாடியுள்ளார்.

சிவநகர் புகழ்பெற வந்தவராகிய முத்தப்பர், தம் மரபினர்மீது, 'திருமுகவிலாசம்.' என்று ஒரு நூலும் பாடியுள்ளார். இன்னாருடைய ஆசிபெற்ற பின்னரே, 'நகரத்தார்' எனச் சிறப்பித்துக் கூறப்பெறும் வணிக மக்கள், தனவணிகர்களாய்த் திகழ்கின்றனர், என்று கூறலாம். அத்துணை பெருமைவாய்ந்த பாவலர் முத்தப்பரை நாம் எந்நாளும் மறக்கமுடியாது.

செருக்குடை புலவரை வென்றவராகிய முத்தப்பர், மிக்க நீதிமான் என்றும், அஞ்சா நெஞ்சமுடையவர் என்றும், பிறர்க்கு உதவி செய்தலில் பின்வாங்காதவர் என்றும், பொது நலப்பிரியர் என்றும் தெரிகிறது. இவை, இவர் செய்த நூல்களாலும், தனிப் பாடல்களாலும் விளங்குகின்றன.

தவநிறைப் புலவராம் இம்முத்தப்பருக்கு, நாம் செய்யும் நன்றி, அவர்செய்த நூல்களை யாவரும் அறிய வெளிப்படுத்துவதுடன், அன்னாரை அநவரதமும் போற்று வதுமேயாகும்.

அற்புதங்கள் பல புரியும் ஆற்றல்பெற்ற நம் முத்தப்பர் செய்த சில நூல்களையும் சில தனிப்பாடல்களையும் பலர், பலவிதமாய்ப் பொறுக்கியெடுத்து வெளியிட்டிருக் கிறார்கள். சில அச்சாகாமலும் இருக்கின்றன.

தனவணிககுலதிலகமாகிய, புலவர் பாடுவா முத்தப்ப செட்டியாரவர்கள் செய்த, சில தனிப்பாடல்களையும் சில நூல்களையும், ஒன்று சேர்த்து, புத்தக ரூபமாய் வெளிப் படுத்தியுள்ளோம்.

ஸ்ரீ, பாடுவா முத்தப்ப செட்டியாரவர்களின் வம்சத்தி லுதித்த, எனது குமாரனாகிய திருவளர் செல்வன், அழகப்பன், எனது குமாரியாகிய திருவளர்செல்வி, வள்ளியம்மை, இவர்களின் காப்புக்கட்டுப் புதுமை விழா வைபவத்தில்வந்து குழுமியிருக்கும் அன்பர்களுக்கு இந்நூல், அன்பளிப்பாய் உவந்தளிப்பதாகும்.

இங்ஙனம்.

ராம. முக. மு. நாராயணஞ் செட்டியார்,

பி. அளகாபுரி.

உ

பொருளடக்கம்.

1. தனிப் பாடல்கள்
2. ஜெயங்கொண்டார் சதகம் (சில செய்யுள்கள்)
3. திருமுகவிலாசம்
4. நகர வாழ்த்து
5. உச்சினிமாகாளியம்மன் பேரில் கும்மி

OFFICE OF THE ... OF BOOKS
15 DEC 1954
MADRAS

ஸ்ரீ பாடுவா முத்தப்ப செட்டியார் அவர்கள்.

முத்தப்பரைப் பற்றிய சிறப்புப் பாடல்கள்.

கற்றவர் கல்விக்கு உரையாணி! நீ தங்கக்கட்டி நின்னைப்
பெற்றவளே செல்வப்பேறுள்ளதாய்! நின் பிதாமுன்
[செய்த
நற்றவமே தவம்! நாட்டார் வணிகர்க்கோர் ரத்தினம் நீ!
கொற்றவரும் புகழ் முத்தப்ப பூப! குண ரத்தினமே.'

(வெண்பாப்புலிக் கவிராயர்.)

'திருமதுரை சிவல்பட்டி இளையாற்றங்குடி
செட்டி சீமான் என்னும்,
உருமதன னழகப்பன் உதவிய முத்தையனெனும்
ஒப்பில் சிங்கம்,
அருமறை சாஸ்திரங்களோ டாகமங்கள் புராணங்கள்
அனைத்துந் தேர்ந்தும்,
பெருகுபழ மொழிநூறும் கதைநூறும் சதகமெனப்
பேசிற்றுமால்.,

(சுந்தரமுதலியார்.)

'வையாபுரியில் வடிவேலவரை மனதிலெண்ணி,
ஓய்யாரமாகத் துதிப்பவனே நல்ல உத்தமனே,
அய்யா பெரிய கருப்பன் சாமியை அனுதினமும்,
மெய்யால் போற்றிப் பணிவாய் முத்தைய
[விசர்ச்சனனே.

(ஓர் தமிழ் வித்துவான்)

உ சிவமயம்
ஜெயங்கொண்ட சோழீசர் துணை.

தனிப் பாடல்கள்

மரகத விநாயகர் துதி

மாவேழும் எழுவழி நகரத்தார்க் கென்றும்
கோவாழும் செல்வக் குலதெய்வ—மாய்வாழ்
மரகத விநாயகனை மாமலர்தூய் வாழ்த்த
வர நல வாழ் வெல்லாம் வரும்.

தனவணிகர் வளம்பெறவேண்டித் திருமகளை வேண்டல்.

1 காடு வெட்டிப்போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்-வீடுகட்கு
அன்றைக்குவந்த எங்கள் அம்மா! இலக்குமியே
என்றைக்கும் நீங்காதிரு.

2 நின்மேலுமாணை நின்மகன்மேலுமாணை நின்மாக் [கொழுநன்
தன்மேலுமாணை தமிழ்மேலுமாணை தவமாவணிகச்
சின்னஞ்சிறுவர் தெரியாத காளையரென் செயினும்
பின்னும் பொறுத்திருப்பாயே! பெரிய இலக்குமியே!

3 நீங்காது நின்மகனும் நெடியதிருமாலும்
பாங்காக அன்றுவந்த பாற்கடல்போல்—தேங்காமல்
நன்றாக நீ இருந்து நாளும் வளம் பெருக்கி
என்றைக்கும் நீங்காதிரு.

—❖—

நேமத்தில், ஜெயங்கொண்டார்சதகத்தை அரங்கேற்றக் கூடியிருந்த காலத்தில், ஓர் வயது முதிர்ந்த வணிகரின் வேண்டுகோளுக் கிணங்கி, முத்தப்ப ஐயா அவர்கள் வணிகர்களின் நன்மையைக் கோரி ஜெயங்கொண்ட சோழீசர் மீது பாடிய பஞ்சவர்க்க பூஷணம். இவ்வைந்து பாடல்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்துப் படித்தால் 'நமசிவய' என்ற பஞ்சாக்ஷரமாகும். அப்பாடல்கள் பின்வருமாறு:-

பஞ்சவர்க்க பூஷணம்

1 நன்றேபெருக நவிலுங்குபேர நகர் வணிகர்
என்றே யுலகம் புகழ அவர்க் கீண்டிரு நிதியம்

நின்றே நிலவ அறமும் கனமும் நெடி பெறத்
தொன்றே சோழீசர் ஜெயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே.

2 மன்னும் பெருமை பெருகிக் குபேரநகர் வணிகர்
என்னும் மகிமையுறவும் வறியவர்க் கீந்திடவும்
பொன்னும் பொருளும் புவியுமுப் போகமும்
[பொருந்திடவும்
துன்னும் சோழீசர் ஜெயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே

3 சிவனுலயமும் திருமால் பணியும் சிறப்புறத்தான்
நவமாய்ப் புதுக்கியும் ஆக்கியும் மேலோர் நவிலு நல்ல
தவமா மிதெனத் தாணியிலோங்கவும் தாங்குமகத்
துவமா சோழீசர் ஜெயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே.

4 வந்தார்க் குதவும் வணிகர் குபேரனும் வளமையர்க்கும்
பிந்தார் தனத்தி லிவரே யுலகிற் பெரியரெனச்
சிந்தார் புர மிளையாற்றங்குடியார் சிறப்புறவும்
சொந்தார் சோழீசர் ஜெயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே

5 யவனம் கலிங்கம் தமிழ் சிங்களம் யாண்டுமுள்ள
புவனமெல்லா மிவர் வர்த்தக மோங்கவும்
[புண்ணியம்சேர்
தவமும் திருவும் தங்கவணிகர் தாம் பெறவும்
துவச சோழீசர் ஜெயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே.

தவமும் திருவும் தங்க வணிகர் தாம் பெறவும்
துவச சோழீசர் ஜெயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே.

முத்தப்பரவர்கள் ஜெயங்கொண்டார் சதகத்தை அரங்கேற்ற ஆரம்பித்து காப்புச்செய்யுள் கூறியவுடன், அவ்வவையிலிருந்த ஊனையூர்ப் பாரதியார் எழுந்து, அவையோர், முத்தப்பர் இவர்கள் சம்மதம் பெற்று,

" ஓங்குபத் மாசுரனைக் கண்டோடி ஒளிந்தார்
[விஜயன்
வாங்குதனு வாற்பூசை வாங்கினர்—ஈங்கிருக்கும்

நன்னேமச் சோழீசனுர் ஜெயங்கொண்டார் என்ருல்
என்ன ஜெயங் கொண்டா ரிவர்."

எனப் பாடி விடைகேட்டார். அதற்கு முத்தப்பர் அவர்கள் மறுமொழியாகப் பாடிய பாடல்:-

"என்ன ஜெயங்கொண்டார் இவரென்ருல்,
[முப்புரத்தைச்
சொன்னமய மாய்ச் சமைத்த சோழீசர்—பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணுல்
எரித்துச் செயங்கொண்டர் இவர்."

ஜெயங்கொண்டார் சதகம் அரங்கேற்றி முடிந்தபின், கடைசியில் நன்றியுரையாக முத்தப்பர் பாடிய பாடல்:-

"பரிவினையே வேண்டியிந்நூல் பாடி வந்தோம் மிக்க
பரிசும் உளதென் றளித்தீர் பற்றி—ஒரு சிலையை
வில்லாய் வளைத்த செயங்கொண்டார் திருவருளால்
எல்லாரும் வாழ்வீர் இருந்து."

முத்தப்பர் ஒரு நாள் சந்தையில் உப்பு வாங்கிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிவரும்போது, பசியதிகரித்து, மிகக்களைப்புற்று, நடக்க முடியாமல் சோர்வுற்று, ஓர் வீட்டின் சமீபத்தில் உப்பு மூட்டையுடன் உட்கார்ந்து விட்டார். இவரது நிலைமையைக்கண்ட ஒரு செட்டியார், இவரைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அன்புடன் உபசரித்து அமுதளித்தார். உண்டு களைநீங்கிய முத்தப்பர், ஆனந்தங்கொண்டு ஒரு பாடல் பாடினுர். அது பின்வருமாறு:-

"அன்போ டறுசுவையோ டன்னமளித் தாதரவாய்
என்பசியைத் தீர்த்துவிட்ட தென்னினமே—பின் பிந்
நகரத்தார் தங்களிடம் நண்ணிக் குபேரன்
பகரு கடன் கேட்கவரும் பாங்கு."

ஒரு முறை, சில மாதங்களாக மழை பெய்யாமையால், பயிர்கள் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருத்தலைக் கண்ட உழவர்கள், முத்தப்பரிடம் வந்து முறையிட்டனர். முத்தப்பர், அக்குடியானவர்களையும் அழைத்துக்கொண்டு, காட்டுக் கருப்பையா கோவிலுக்கு வந்து, அடியிற்கண்ட பாடலைப் பாடினுர். அன்றிரவு நாடுசெழிக்க நல்லமழை பெய்தது.

மழையை வேண்டிக் கருப்பண்ண சுவாமிமீது பாடியது:–

'ஆட்டைக் கவர்ந்தவரை ஆட்டினுய் முன்பெனது,
பாட்டுக் கிரங்கியருள் பாலிப்பாய்! வாட்டமுறு
நாட்டுப் பயல்கள் நலமுற்று வாழ்ந்திடவே,
காட்டுக் கருப்ப மழைகாட்டு.'

குன்றுக்குடியில் வெள்ளிமயில் வாஹன வெள்ளோட்டக்காலத்தில் பாதரக்குடி சேனுபதியடிகளின் சொற்படி முத்தப்பர், மழை பெய்யும்படி பாடிய பாடல்:-

'அள்ளி நிதியங் கொடுக்கும் புனல் வயற்
சேனுபதி என் ஐயன் குன்றை—
வள்ளி மணவாளனுக்கு வெள்ளி மயில்
செய்துவைத்த மகிமை பாரீர்!
வெள்ளியறி யாமல் மழை பெய்கிறதே
என்றமொழி மெய்தான்; வெள்ளிப்
புள்ளி மயிலேறி முருகன் பவனி வரக்
கண்டு பொழிந்த வாறே.'

'பெய்யெனப் பெய்யும் மழை' என்பதற் கிணங்க, பாட்டு முடியுமுன் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. விடாமல் மழை பெய்தலைக்கண்ட சேனுபதியார், மழை நிற்கப் பாடும்படி முத்தப்பரிடம் கூற, முத்தப்பர்,

'வந்து மழை பொழியும் வானே! வெஞ்சூர் தடித்த
கந்தர் திருவிழாக் காலத்தில்— தொந்தரையாய்
நீர்த்துளியை ஊற்றிவிடல் நேர்த்தியல; மாற்றிவிடு
கீர்த்தி வரும் நாட்டன் மொழி கேள்.'

என்று பாடினர். மழையும் நின்றது.

ஓர் கால் சுற்றுவட்டகை முழுதும் மழையின்மையைக் கண்ட முத்தப்பர், நெடுமரம் மலையரசி கோவிலுச்குச் சென்று மழையை வேண்டிப் பாடிய பாடல்:-

1 "மேதினி விளங்கு திருபாலி! அப்பாலி!
நீ விமலி! திருசூலி! கெவுரி!
விண்ணவர்கள் வந்துபணி முக்கோண நாயகி
விளையாடுகின்ற விமலி,

2 மாதமொரு பனிரெண்டாம் மழையில்லாமலே
வையகந் தன்னிலெங்கும்
வாரிக் குடித்திடத் தண்ணீரில்லாமலே
மாடாடு வெகு சேதமாய்,

3 சாதகம தாகவொரு சன்னமழையிடையிலே
தான் பெய்ய விதைதெளித்தோம்
தட்டுண்டு போன பயிர் போகவே நின்ற பயிர்
தான் சோம்பி வாடுதம்மா !

4 ஏதம்மா இப்படி நீ கொடுமை பண்ணினல்
ஏழைகள் தழைக்க வசமோ?
இருப்பதுவு முன் மன உருக்கமும் வைத்துநீ
எங்களது கலியகலவே

5 நீதியாய் வருணனை அழைத்து நீ உத்தரவு
நிச்சயமதாக அருளி
நீர் கொண்ட மேகங்கள் சூல் கொண்டு விம்மியே
நெடுமாரி வலுவாகியே

6 ஆதிமுகடேறியே விண்ணெங்கு மின்னியே
அசையாத காலூன்றியே
அன்புடன் முழக்கியே வெகுமழை பொழிந்திட
ஆறு குளம் ஏரி யெங்கும்

7 ... ...
... ...
கரையெலாம் பெருகியே மறுகால் திறந்திடக்
கடாட்சம்வைத் தருள் புரிகுவாய்

8 பாதிமதி யணிகின்ற வேத பஞ்சாட்சரி
பரப்பிரம்ம சிவசொரூபிணி
பட்டத்து மலையரசி கிட்டத்துச் சூர்வளரும்
பட்டத் துரைச்சியுமையே.

(இச்செய்யுளின் ஏழாவதுவரி அகப்படவில்லை)

மேற்கண்ட பாடலைப் பாடிய பிறகு நல்லமழை பெய்தது நாடு வளம்பெற்றது.

கொன்னையூரில் மழையை வேண்டிப்பாடியது:-

'கொன்னைப் பதிதனிலே கொலுவிருக்கும் ஈஸ்வரியே
உன்னைப் பணிந்தேனம்மா உன்பாதம் தஞ்ச
[மென்றேன்
மின்னிக் குமிறியிந்த மேகமெல்லாந் தாள்சிறந்து
கொன்னைக் குளம்பெருகமழை கொண்டுவர
[வேணுமம்மா.'

ஓர்முறை, முத்தப்பர், சேனுபதியார், முத்துராமலிங்க இறைவர் ஆகிய மூவரும், சிக்கலிலே நடந்த திருவிழாவிற்குச் சென்றிருந்தார்கள். அங்கு மடத்தில் தங்கி

யிருந்தபொழுது, ஒருநாள் நடு இரவில், முத்துராமலிங்க இறைவருக்கு கையில் இருந்த வெற்றிலை தீர்ந்துபோய் விட்டதால், வெற்றிலை வேண்டியிருந்தது. நடு இரவாகை யால் கடைகள் மூடப்பட்டு இருந்தன. இறைவர், முத் தப்பரிடம், சிக்கல் ஆண்டவன் மீது ஓர் பாட்டுப்பாடி வெற்றிலைபாக்கு வரவழைக்கும்படி கூறவே, முத்தப்பர்,

'குத்துவார்; வெட்டுவார்; கோடி பெறுவார் நின்பால்
பத்தல்ல, எட்டல்ல, பஞ்சமில்லை—இத்தனைதான்,
வெற்றிலையும் பாக்கும் விரும்பினேன் சிக்கலின் கண்,
உற்றிருக்கும் வேலா உதவு.' என்று பாடினார்.

பாட்டுமுடியும் போது, மடத்து வாயிற் கதவுதட்டுஞ் சத்தம் கேட்டது. கதவைத்திறந்தனர். ஓர் சிறு பெண், கோயில் தாம்பாளத்தில், வெத்திலை, பாக்கு முதலியன வைத்துக்கொண்டு வந்து, 'குருக்கள் ஐயா கொடுக்கச் சொன்னார்' என்று சொல்லி, வெற்றிலைத் தாம்பாளத்தைக் கொடுத்துவிட்டு மறைந்தாள். இறைவரும், சேனபதி யாரும், முத்தப்பருடைய அருள் நலத்தைப் பாராட்டினர். 'இறைவன் தன் செயலைச் செய்தான்' என முத்தப்பர் கூறினர். அவர்கள் அத்தாம்பூலத்தைப் போட்டுக் கொண்டார்கள்.

அதே இரவில், கோவில் குருக்களும், "கோயில் வெற்றிலைத்தட்டு முத்தப்பரிடம் இருக்கிறது, காலையில் வாங்கிக்கொள்" என்று வேலவன் கூறுவது போன்று கனவு கண்டார். குருக்கள் மூலமாய் இச்செய்தி ஊர் முழுதும் பரவியது.

தன் வேண்டுதலையை நிறைவேற்றிய வேலவனை எண்ணி மனம் நெகிழ்ந்தார். முத்தப்பர் காலை வழி பாட்டின் போது அடியிற்கண்ட பாடலைப் பாடினார்:-

'அவ்வைக்கும் அந்த அருணகிரியார்க்கும்
செவ்வையாப் பாடும் திறமறிந்தே - நவ்வைக்
கனியும் கவியும் கலந்தளித்த வாறே
நனி யெனக் கீதிந்த வகை நன்று!'

பசிக்கு அன்னம் வேண்டி — சாக்கோட்டையம்மன் மீது பாடியது:—

'உமையவளே சமயமிது சாதங் கொண்டோடிவா
என் வயிறு பசியும் தாளாதே—இமயவர் கோன்

பூசிக்கும் சாக்கை புகழ் வீரர் சேகரதம்
காசிக்கும் சீமாட்டி காண்.'

'வெண் பாப்புலி' என்ற புலவர், ஆட்டுக்கிடாவின் தலை வெடிக்கப் பாடியவுடன், ஆட்டின் தலை வெடித்தது. அத் தலை மீண்டும் ஒட்டிக்கொள்ளுமாறு, புலவர் முத்தப்பர் பாடியது:—

'கலையது படித்த வென்பாக் கவிப்புலி கவியைக் [கேட்டுத்
தலையது வெடிப்புண்டாடு தவிக்கிறதந்தோ முன் [போல்
நிலையது பொருந்த வென்று நிகழ்த்தினேன் முத்தப் [பன்யான்
உலகிலுள்ளோர்கள் காண்பீர்! உமையவள் சுதன் [காப்பாமே.,

பாடி முடிந்ததும், ஆடு பிழைத்தெழுந்து வெண்பாய் புலியை மூர்க்கமாய்ப் பாய, அவர் ஓடி ஒதுங்கினர். அப்பொழுது முத்தப்பர்,

'பாட்டுக்குப் புலி பயந்து பதுங்கியதும் போதாமல்,
ஆட்டுக்குப் புலி பயந்தால் ஆர்தான் நகையார்கள்'

என்று கூறினர்.

ஒரு முறை, முத்தப்பர், தம் நண்பர் வேம்பத்தூர் மார்த்தாண்டப் புலவருக்குப், பொருளுதவி செய்யுமாறு, ஆத்தங்குடிக் காடப்ப செட்டியாருக்கும், நேமம் நகரத்தார்க்கும், சிபார்சுச் சீட்டு எழுதிக் கொடுத்தார். அங்கு சென்ற மார்த்தாண்டப் புலவருக்கு, நேமத்தில் பரிசும், ஆத்தங்குடியில் அவமதிப்பும் கிடைத்தது. அப்பாடல்கள் பின்வருமாறு:-

நேமம் நகரத்தார்க்கு

'இத்திரை முழுதும் இசை பெறு நம்மீர்!
முத்தப்பன் யான் மொழிவது கேண்மின்!
செந்தமிழ்ச் செல்வச் சீமானி வர்தாம்,
வளம்பெறு நிம்பை மார்த்தாண்டப்புலவர்,
மடப்பளியடுப்பு மறந்தது தொழில்: அதில்,
ஆம்பி பூத்ததாம்: ஆதலினால் இவர்,
நம்பாலுற்றனர்: நாவலரிவர்க்கே,
வேண்டும் பரிசில் விரும்புவதளித்தும்,
ஆண்டிவர் வறுமைநோய் அறவே களைந்தும்,

சிறப்புற அனுப்புவீர் சீரார் சேம
நகரிற்குபேர நலம் படைத்தோரே!

ஆத்தங்குடிக் காடப்ப செட்டியாருக்கு.

'அம்பலகாராவென்று ஆயிரந்தரம் சொன்னாலும்
வம்பருக் களிக்குஞ் செம்பொன் மறையவருக்
[கருமை யென்றாய்,
நம்பினோர்க் கியாச் செம்பொன் நஞ்சினுங்
[கொடியதாகும்,
தம்பி கடாப்பா நீ தமிழ்ப்பயன் அறிந்து
[கொள்வாய்.'

முத்தப்பர் காலத்தில், பாதரக்குடியிலிருந்த வணிகர்களின் ஞானசிரியரான சேனாபதியடிகள் மீது முத்தப்பர் பாடிய, புகழ்ப் பாடல்களில் சில பின்வருமாறு:-

1 'பூவே கருணைக்கடலே! நவநிதிப் பொக்கிஷமே!
கோவே! இருப்பத்தொருவள்ளலே! கொடைக்கேற்ற
[கற்பக்
காவே! செவ்வந்தி மறையோனுதவிய கண்மணியே!
தேவே! புனவயல் சேனாபதிக்குரு தேசிகனே!'

2 'கைகைக்கு நாயகம்! தென்கூடல்சுந்தரம்!
[வாளிதொடு,
கைகைக்கு நாயகம் காண்டீபன்: கல்விக்கியல்
[மதுரைப்
பொய்கைக்கு நாயகம் சங்கப்புலவர்:
[பொன்பொருளைச்
செய்கைக்கு நாயகம் சேனாபதிக் குருதேசிகனே.'

3 'திருவளரு மார்பா! ஜெகம் அளந்த தாளா!
கருமுகிலே! செங்கமலக் கண்ணா—அருளளிக்கும்,
சீதரனே! எங்கள்குரு தேசிகசேனாபதியை
மாதவனே! காத்தருள் செய்வாய்.'

முத்தப்பர் ஒருமுறை பாதரக்குடி மடத்துக்குச் சென்ற சமயத்தில், சாப்பிடுவதற்குப் பழைய சாதந்தான் இருந்தது. முத்தப்பர் அதை விருப்பத்துடன் சாப்பிட்டார்

மடாதிபதியான சேனுபதியவர்கள், பழங்கட்சி எப்படி யிருந்ததென்று முத்தப்பரைக் கேட்க, முத்தப்பர்பாடியது:-

'தலஞ்சேரு மூவேந்தர் புவிவளர
ஞானமுடி தரித்தோன், கீர்த்தி
நலஞ்சேர்ந்த தனக்கிணையான்
வனிசேர்க் கைந்தெழுத்தை நவிலுங்கோமான்
வளஞ்சேரும் புனவயற் பாதரக்குடிச்
சேனுபதிதன் மடத்திலுண்ணும்,
பழஞ்சோற்றுக் கிணைவருமோ மற்ற
மடபதிகள் செய்யும் பவிசுதானே.'

முத்தப்பர், தமது நாற்பதாவது வயதிலே, தமக் கேற்பட்ட மேகநோய் தீர்த்துக்கொள்ளவேண்டி, உண்ணு நோன்பிருக்கும் போது, கண்டரமாணிக்கத் திற்குச் சமீபத்திலுள்ள நடுவாற்று மருதம்பிள்ளையார் சந்நதிக்குச் சென்று பத்துத்தினங்கள் நோன்பிருந்தால், நோய்திருமென, அம்பிகையின் கட்டளை பிறந்தது. அந்தச் சமயத்தில், முத்தப்பர் கிரணிப்பட்டி முத்துமாரியம்மன் மீது பாடிய பாடல்கள்:-

1 பூங்கமலமாது கலைமாது புனல் மாதேழு
புவிமாத ரின்னடிதனைப்
போற்றியே முப்பத்து முக்கோடி தேவரும்
புஷ்பவருடங்கள் சொரியப்
பாங்கு பெரும் இந்திரன் அட்ட முனிவர்களொடு
பண்பு நாரதர் நத்தியாம்
பகரறிய கின்னரர் சித்த வித்தியாதரர்
பலகோடி சித்த முனிவர்
ஆங்கவர்கள் மத்தளம் கைத்தாளம் துத்திப் புல்
லாங்குழல் செப்ப முக்கண்
ஐயனுடனே தில்லையம் பதியில் நடனமா
டிய பராசக்தி நீயே
மாங்குயில் மொழிச்சி மலையத்துவசன் ஈன்றிடும்
வாலாம்பிகைப் பெண்ணும் நீ
வாரிதிகழ் புவியிலுயர் கிரணிநன் நகரில் வளர்
மாரி மகமாயி உமையே.

2 பூதலந் தனையுண்டு தேவகி குமாராய்ப்
பூதகி தன் உயிரையுண்டு
பொரவந்த மதகிரிக் கொம்பையு மொடித்து வரு
புள்ளின் வாயைக் கிழித்துச்,
சாதகம தாகவொரு சக்கரத் தோடுவரு
சகட அசுரனையும் வென்று
தருவிளாங் கனிதனைக் கன்று லெறிந்தரவின்
தலை மீதிறே நடித்துச்
சூதுசெய் பாண சுரன் கைகள் ஆயிரம்
துணித்து வெள்ளானை வேந்தன்
சொற்படி வரும் கல்லின் மாரியைக் கிரியினுல்
துயரற விலக்கி வைத்த
மாதவ சகோதரி மனோன் மணி தயாபரி
மகதேவி சாமி பரையே
வாரிதிகழ் புவிலுயர் கிரணிநன் னகரில் வளர்
மாரி மகமாயி உமையே.

3 மிவணியனூர் வரமளிதுந் திகிரி கொன்
விஷ்ணு சங்கார கர்த்தா
மேன்மை வந்ததும் வஜ்ர பாணிபொன்னூட்டுக்கு
வேந்தனென அரசாள்வதும்
தூணிநிறை புஷ்ப பானத்தினுல் மன்மதன்
தொல்புவியி லுள்ளோர்களும்
சுபமானமும் மூர்த்தியும் மயங்கத்
தொடுத் தெய்யும் வல்லிமைகளும்
ஆணிமுனி துவார் ரிஷிகள் சாபமு நிவர்த்தியும்
அருந்ததி மடந்தை கற்பும்
அம்புலி நிறைவதும் குறைவதும் பூமிதனை
ஆதிசேஷன் தாங்களும்
வாணி மனதிஷ்டிப்பு நின்மகிமை யல்லாது
மற்றவர்களார் முடியுமோ
வாரிதிகழ் புவியிலுயர் கிரணிநன் னகரில் வளர்
மாயி மகமாயி உமையே.

4 காரொத்த குழலும்மதி நேரொத்த நுதலுமிகு
காண்டீப நிகர் புருவமும்
கணையொத்த விழியும் கரும்பொத்த மொழியும் இரு
கருணை மகரக் குழைகளும்

சீரொத்த குமிழ்நாசி பவள நிகராதரமும்
　　சிப்பிமுத் தொத்த நகையும்
செய்ய மருங்கொத்த விழருங்கச் சுலாவி வளர்
　　செப்பொத்த தனபாரமும்
ஏரொத்த கரமுவட மலையொத்த உதரமும்
　　இணையுருச் சிறு மருங்கும்
இளவராலொத்த சிறு காலுமலரடியுமென
　　திருவிழி மகிழ்ந்து காண
வாரத்திலே சிங்க வாகனத்தில் நீயும்
　　வந்தருள் செய்யுமம்மா
வாரிதிகழ் புவிலுயர் கீரணிநன் னகரில் வளர்
　　மாரி மகமாயி உமையே

5 மதயானை முகமீதில் வருங்கோடெனத்திரண்டு
　　மதிஞான வேலமுந்தி
வரைக்கு நிகராய் எழுந்தே சிலாபத்தின்
　　மணி நூபுரங்கள் தாங்கச்
சுதையான தென்னங் குரும்பையீ டன்றி யெதிர்
　　தோன்றுகா முகர்கள் நெஞ்சை
துளைப்படுத்திப் பொற்குடங்களென வஞ்சியிடை
　　துவள வளருந் தனத்தில்
அதிரூபமடவார்கள் விரகவட வாக்கினியில்
　　யானமுந்தித் துயரமும்
அலைகின்ற கவலையினி யாறும் படிக்குந்தன்
　　அருள் தந்து காப்பை யம்மா
மதியாரு சோலை நவநிதிசேரு கல்வாச
　　வள நாட்டினில் பிறந்த
வாரிதிகழ் புவியிலுயர் கீரணி நன்னகரில் வளர்
　　மாரி மகமாயி உமையே

6 வெள்ளிமலை யானையொரு சூதக்கனிக்காக
　　வேண்டி வலமாக வந்து
விண்ணோர்கள் மண்ணோர்கள் செய்காரியத்துக்கு
　　வினவ முன் வந்து அருளித்
துள்ளிவரு மூஷிகன் தனிலேறி ஐங்கரன்
　　தோன்ற மத கரிமுகமுமுள்ள
தொந்திவயிற்றோனையுந் தந்தவனுமாகவே
　　தோன்றியசு ராளை மாய்த்துப்
புள்ளிமயிலேறியே வானோர்கள் துன்பங்கள்

போக்கிவடி வேலணிந்து
புரந்தரன் செய்கைய, முணர்ந்து வேல்விழியாள்
புனக்குற மடந்தையான
வள்ளிமணவாளனை யு மீன்ற மாதங்கி நின்
மகிமை யெவரறிவ ரம்மா
வாரிதிகழ் புவியிலுயர் கிரணி நன்னகரில் வளர்
மாரி மகமாயி உமையே

7 ஒரு வலி விகாதமும் வாராது திரேகத்தில்
ஒரு பிணியும் அணுகிடாது
உத்திபகடேனும் எமதூதர் விடுதூதர்
ஒருகாலு மெதிரிடாது
இருவினைப் பயனிலொரு துன்பமும் வாராது விஷம்
என்பதும் தொட்டிடாது
இனியொரு விரோதங்கள் வாராதரசர் பகையில்லை
எதிர் ஒருவர் செய்வதில்லை
பெருமை செறிமானமரி யாதையும் குறையாது
பெருத்த பாக்கியம் வருவதும்
பிந்தாது பின்புமொரு சென்மத்திலே வந்து
பிறக்கின்ற துன்பமில்லை
வருமிடிகளோவிலகும் உனதடியை நாள்தோறும்
மனதினில் நினைக்க அம்மா
வாரி திகழ் புவியிலுயர் கிரணி நன்னகரில் வளர்
மாரி மகமாயி உமையே

8 கனமுண்டு வேணசௌ பாக்கிய முண்டு கலை
கற்றவர்கள் நேசமுண்டு
கல்விப் பிரசங்கம் உண்டு அயராத தர்மக்
கருத்துண்டு யூகமுண்டு
தனமுண்டு புத்ர சந்தானமுண்டரசர் மன
சந்துஷ்டி யினிது முண்டு
சற்புருஷ ரென்றுலகில்வரு கீர்த்தியுண்டு மன
தைரியமு முண்டு நல்ல
இனமுண்டு அஷ்டலட்சுமி விலாசமு முண்டு கன
இனவிபர மகிழ்ச்சியுண்டு
இனிவிரத பலனுண்டு சற்குணர் உறவுண்டு
எந்நாளு முண்டு ஞான
மனமுண்டு நின்னுடைய பாதார விந்தத்தை
மனதினில் நினைக்க அம்மா

வாரிதிகழ் புவியிலுயர் சிரணிநன் னகரில் வளர்
மாரி மகமாயி உமையே.

9 கனதைபெறு திருநீலகண்டர் விருத்தாப்பியங்
கழிந்திளமை தன்னை ஈந்தாய்
கருவானோர் களுக்கரயசுரர் மாளவே
கந்தர்க்கு கேலுமீந்தாய்
பனகவிட முண்டீசன் மாளாது விடமதிற்
பதிய வைத்துயிரை மீட்டாய்
பாண்டியன் புத்திர வாஞ்சைகள் தீர வெண்
பத்ம மலரில் பிறத்தாய்
உனை நம்பினே னென்ற அபிராமி பட்டனுக்கு
உத்தமமா வாசை தன்னில்
உயர் விண்ணில் மிக்க சந்திரோதயம் காட்டி
வந்துதவி செய்தவுளநீ
மனதினில் இஷ்டம்போல் நாவேற உனது திரு
வரமருள வேணுமம்மா
வாரிதிகழ் புவியியர் சிரணிநன் னகரில் வளர்
மாரி மகமாயி உமையே

10 மெய்தோண வேணுமுயர் பழையகவி புதிய நூல்
மிகவு மறிவாக துவணும்
மிக்கநற் றமிழ்சொல்லநற் சாரீரமும் வேணு மனம்
வேண்டு பாக்கியமும் வேணும்
பொய் நாண வேணுமுயர் சிவபக்தி குருபக்தி
போதவே வேணு மிக்க
பொறை வேணுமெய் சௌக்கியமும் வேணுமுயர்
புகழுவு மிரப்ப வருக்குக்
கைநாணிடாதபடி நல்க வேணும் பின்பு
கடைசியில் பதவி வேணும்
கனதையுட னிதுவெலாம் யான்பெற உந்தனுட
கருணைவர வேணுமம்மா
மைநாணுகந்த மடவன்னமே தென்னிளசை
வாழ வந்திடு மமுதே
வாரிதிகழ் புவியிலுயர் சிரணிநன் னகரில் வளர்
மாரி மகமாயி உமையே.

முத்தப்பர் கொங்கரத்திக்குச் சென்றூர். நடுவாற்று மருதம் பிள்ளையாரைத் தெரிசித்தார். வழிபட்டார். நோன்

பிருந்தார். நோய் நீங்கப் பெற்ருர். உடல் நலம்பெற்ருர். அங்கு அவர் தங்கியிருந்த பத்து தினங்களில், நாளுக்கொரு பாடலாக மருதம் பிள்ளையார் மீது பத்துப் பாடல்ள் பாடினர்.

அவை கீழே தரப்பட்டுள்ளன.

நடுவாற்று மருதம் பிள்ளையார் மீது, (விருத்தம்)

1 பூமேவு மிதழி மாலிகை யணியு மீசன்
புத்திரனே! சதுர் வேதன் மைத்துணனே சாமி
காமேவும் ஐங்கர விநோத! முப்புரிநூல்
கர்த்த பெருச்சாளி வாகன ஒய்யார!
பாமேவும் ஒளவையார் தான் கண்டு பணியும்
பாத வல்லபை யுடைச் சமேத வைபோகா!
மாமேவு மார்ப! கருடப் பரியிலேறும்
மால்மருக னுகவந்த மருதம் பிள்ளையாரே!

2 ஆரணர்க்கும் நாரணர்க்கும் ஐமுகவர் தனக்கும்
ஆதியாய் வந்தபரஞ் சோதியே! ஞானக்
காரணத் தினைப்புனத்தைக் காத்த வள்ளி மானைக்
கந்தனுக்கு வசப்படுத்தித் தந்த தொந்தியோனே.
தாரணிக்குள் உன்பாதம் நம்பும் அடியார்கள்
சஞ்சல மெலாந்தீர்த்து கெஞ்சிலுறைவோனே;
வாரணத்தின் முகம் படைத்த வாமன சொரூபா!
வள்ளலே! நடுவாற்று மருதம்பிள்ளையாரே!

3 அந்தமிகு கும்பினித் துரைமார் அநேகம்
அவர்களிலே பெரியதுரை அக்கினிசிற் றளவாய்
சிந்த மிகு பட்டாளம் எண்ணத் தொலையாது
ஜெய கெவுரிராஜனும் தென்சீமைத் தளமும்
இந்திரன் தென்கோடி தொண்டைமான் சேனையும்
இரதகஜதுரகங்கள் பதினெண்ணுள் நின்றும்
மந்திரதம் புயமருது பாண்டியன் தன் பொருட்டால்
வந்திறங்க விடுதி விட்ட மருதம் பிள்ளையாரே!

4 பன்னுதமி ழோங்குதிருக் கோட்டி திருப் புத்தூர்,
பட்டமங் கலநாடு; மிக்க வெளி யாத்தூர்;
பொன்னல்மிகு கோனடு; கானடு; வள்ளூர்;
பூங்குன்ற நாடு; கல் வாச உயர் நாடு

தென்னேம நாடு; ஏ ழூர்ப் பத்து நாடு;
திருவதனைநாடு; பா லையநாடு; ராஜ
மன்னர் புகழ் பாகனி நாடு கண்டு கொண்ட
மாணிக்கநாடு பணி மருதம் பிள்ளையாரே!

5 சீதளி நதியும்பல சிங்காரத் தோப்பும்
தேரோடு வீதிகளும் பட்டணமும் கடையும்
ஆதவன்மண் டலமடுத்த கோட்டைகொத்தளமும்
அகில நிறை வாவிகளும் கோவில்சிக ரமுமாம்
சாதிநிறை நான்குபல குன்றை வனமான
தனித்திருப்பத் தூர்க்கருப்பர் தாள்போற்றி
[மேவும்
மாதுசிவ காமி திருத் தளிநாத ருடனே
வடுகேச ரும்புகழு மருதம் பிள்ளையாரே!

6. ஏழை எளியோர்கள் குடி ஈடேறும் படிக்கு
இதைச் சேர்ந்த புவியிலுள்ள வரிகளைப்பெருக்கி
காளமுகில் போற்கருத்து வானைகுதிபாயும்
காவேரி யாறுதனைக் காலாற்றுக் கிணக்கி
ஆழியும் கொள்ளாமல் தத்தளிக்கப் பாயும்
ஆற்றின்சங் கீதம்முத் தாரமலை சேரும்
வாளை திமிங் கிலமகர மல்கி விளையாடும்
மணிமுத்தா நதியில் வந்த மருதம் பிள்ளையாரே!

7 புகழ்வேந்தன் திருநாட் டிரன்சூதர்க்கும் பாண்டு
புதல்வருக்கும் பகைமீறி புனக்கானம் புக்கு
மிகவாண்டு பதினன்கு பாண்டவர்கள் இருந்து
மெலிந்ததுவும் நூற்றுவர் மலிந்ததுவும் மாலோன்
சுகமான உயர் சரண மிருபாதம் சிவக்கத்
தூதுநடந்ததுவும் சண்டை தொடர்ந்து
முடிந்ததுவும்
மகமேரு ஏடாக எழுத்தாணி கோடாய்
வரிந்துபா ரதமெழுது மருதப் பிள்ளையாரே!

8 வேதாவும் லெட்சுமிதன் சமேதாவும் தானும்
வீழ்ந்தோட லாகிமனம் வெம்பியென் றுங்காணும்
பாதா ரவிந்தமர விந்தம் தில்லைவாழும்
பகவனையும் பச்சைநிற மாலினையும் படைத்து

மாதேவியாதாரம் ஈரேழு புவிக்குளிவள்தானும்
அல்லாதுவே றில்லையென்று அருமறைகள்
உரைக்க
மாதாவைப் போலப்பெண் வேணுமென்று தேடி
வழிக்கரையில் காத்திருக்கும் மருதம்
பிள்ளையாரே

9 தேவநக ராளுமுத்து விஜய ரகுநாத
சேதுபதி பெயருடைய தேவமகா ராஜன்
பூவுலவு சவிவர்ண போஜமகா ராஜன்
புகழ்முத்து வடுகநாம கேந்த்ரமகா ராஜன்
காவலன் மருதுபாண்டிய போஜ மகாராஜன்
கருதிய நவாபுகும் பினிராஜ னுடனே
மாவலவன் புஜபல ஸ்ரீ கௌரிவல் லவனும்
மாராஜன் பணிந்தேத்து மருதம் பிள்ளையாரே!

10 மேகமெனும் ரோகமது தேகத்தி லாகி
மெய் பொறுக்க மாட்டாமல் ஐயோ என்றலறி
ஆகுமிகு துயரந்தனைப் பொறுக்க ஆற்றேன்
அத்துயரந் தீர்த்தென் மெய்ப்பிணி விலக்கித்
தேகபரி சுத்தமொடு திரேகபல மாக்கிச்
சிந்தையும் நிறைகல்வி செல்வமெனக் கருளி
மாகமட்டும் புகழோங்கி வாழ்ந்து கொண்டமட்டும்
மால்மருகனுக வந்த மருதம் பிள்ளையாரே!

மேற்கண்ட பாடல்களைப்பாடி தம் நோய் தீர்த்துக் கொண்ட முத்தப்பர், முருகனைப்பாடி, பிறர் நோயையும் தீர்த்த அதிசயம் காண்க:—

முத்தப்பர் ஒருமுறை சேனுபதியடிகளுடன் பழனி ஆண்டவனைத் தெரிசிக்கப் பழனித் தலத்திற்குச் சென்றிருந்தார்கள். அந்தச் சமயத்தில், அவ்வூரில் பரவியிருந்த வயிற்றுப்போக்கு நோய் சேனுபதியடிகளையும் பிடித்துக் கொள்ளவே, சேனுபதியவர்கள் அந்நோயால் மிக்க வருந்தினர். அதுகண்ட முத்தப்பர் பழனியாண்டவர்மீது பத்துப் பாடல்களும், குன்றக்குடி முருகன்மீது பத்துப் பாடல்களும் பாடி, அடிகளுக்குத் திருநீறிடவே, அடிகள் நோய் தீர்ந்து சுகம் பெற்றூர். மேற்கூறப்பட்ட இருபது பாடல்களும் கீழே தரப்பட்டுள்ளன:—

பழனியாண்டவர்.

1 ஞாலம் ஈரேழுலகு இருநூற்று இருபத்து
    நான்கு புவனப் பரப்பும்
நாடறிய ஆயிரத் தெட்டண்ட முப்கெடி
    நடத்திஒரு குடை நிழற்கீழ்
நீலமணி முகில் தவழ நின்றகிர வுஞ்சகிரி
    நிட்டையிற் புடைநெருங்க
நிறைவீர மாமயேந் திரபுரியில் நவமணி
    நிறைத்த அரியாசனத்தில்
கோலமுடி சூடிநிலை பெற்றிருந்ததிக கன
    கொடுமைபுரி சூர பதுமன்
குலமும் அவனுடலும் நெற நெறெனக் கிழித்துமிரு
    கூறிட்ட வடிவேலவா!
வாலசந்திரனை சேனைபதிக்குரு
    மனோ'தப்படி அருள் செய்வாய்!
வளர்திருப் பழனிமலை மிசையினிற் குலவுசர
    வணபவக் குமரகுருவே!

2 சந்திர சேகரநீல கண்டனின் குமரனே!
    சப்பு நிஷ் கள சொரூப
சச்சிதானந்தபரி பூரண திகம்பர
    சடாட்சர கமல சரண
சுந்தரமகாதேவ வேத கீதன் அரிய
    சொர்ணகிரி லோகநாதன்
சுயம்பு உமாபதி யான முக்கட் பரஞ்சுடர்ச்
    சோதியருள் கருணை நிதி!
இந்திரமுகுந்த பிரமாதியரின் முன்பரன்
    இசைந்துகேட் கவு மவர்க்கே
இலகு பிரணவ மந்திரப் பொருளை ஓர்காதில்
    இயம்புசற் குரு நாயகா!
மந்திர தயாநிதி சேனைபதிக் குரு
    மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப் பழனிமலை மிசையிற் குலவு சர
    வணபவக் குமர குருவே!

3 தினமுனது சரணமற வாதவன் அருணகிரி
    தியான சன்னத முணர்ந்தே
திருவுள மகிழ்ந்து மவன் நாவினில் அட்சரம்
    செங்கையால் எழுதவிலையோ?

ஞானதயிரியமான இறையவர்களுக்குரம்
 கற்பித்து நற்கீரர் தன்
கண்கலக் கங்கண்டு வரையிற் குகை தனில்
 கவியினால் பாடி யழவும்
தனதடிமையான பகழிக்கூத்தன் நற்சுவை
 ததும்பவும் உரைத்த பிள்ளைத்
தமிழுக்கு வாரானை சொல்லவும் பயிலில் என்
 சாமி நீ வரவில்லையோ?
வனச நிதி சேனா பதிக்குரு சிகாமணி
 மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப் பழனிமலை மிசையினிற் குலவு சர
 வணபவக் குமர குருவே!

4 வேதநா ரதமுனிவன் வந்துமக் கேற்றதொரு
 மின்னை யான் கண்டேன் என
விபரமாய் வள்ளியின் இலட்சணம் முழுதுமவன்
 விள்ளவுங் கேட்ட டங்காக்
காதலால் எய்திக் குறிஞ்சி நில மீதினில்
 கானவர் தினைப் புனத்தில்
கண்டுறவுகொண்டு முயிரொன்றுட லிரண்டுடன்
 கனியென முளைத்து நின்றே
நாதச்சிலம்பு சரணத்தி லசைந்திட
 நடந்து பூங் கிளிகளோட
நாவரற்றிய வள்ளி நாயகியை வனமதில்
 நயங்கொண் டணைந்த குமரா!
மாதவன் சேனா பதிக்குரு தயாநிதி
 மனோரதப்படி அருள்செய்வாய்!
வளர் திருப் பழனிமலை மிசையினிற் குலவுசர
 வணபவக் குமர குருவே!

5 பணிகலா மதிஅறுகு புனல் இதழி மாலையணி
 பரமனும் உலகனைச் சூழ்
பச்சைக் கொடிக்கருணை பூத்த விழி உமை
 புருவ பார்வையும் களி கூரவும்
அணிகுலிச பாணிநற வொழுகுமென் கமலமலர்
 அந்தணன்; அனந்த சயனன்
அமரர்முதல் அகமகிழக் ககனமலர் மழை சொரிய
 அகில புவனம் தழைக்கத்
துணிலநெடு சலதியில் தருவென முளைத்திடும்

சூரன் உயிர் வானேறவும்
துதிசரவணத்தினில் செனித்தருள் தனிப்பாஞ்
சுடரென்ன வந்த சேயா!
மணிமுகிற் கிளையான சேனாபதிக் குரு
மனோரதப்படி அருள்செய்வாய்!
வளர் திருப் பழனிமலை மிசையினிற் குலவு சர
வணபவக் குமர குருவே!

6 கலிகால மீதினில் கண்கண்ட தெய்வம் நீ!
கருதும் அடியார்கள் வினவும்
கருமம் நிறைவேறவும் தயவுசெய் யாததென்ன
காரணம்? சுவாமி மனது
வலிதான கல்லோ; இரும்போ; கனங்கொண்ட
வயிரமோ? தானிரங்கா
வகையேது? சித்தம் திரும்பினால் இப்போது
மலையும் அணுவாகும் உலகில்
புலியின்முன் நரிஊஞ்சல் ஆடுமா? வினையெல்லாம்
பொறியிட்ட பஞ்சுபோலாம்
பொய்யரிட மணுகாத மெய்யனே! எவரும் நின்
புதுமை அளவிட லாகுமோ?
மலிவான புகழ்பெற்ற சேனாபதிக் குரு
மனோரதப்படி அருள்செய்வாய்!
வளர் திருப் பழனிமலை மிசையினிற் குலவுசர
வனபவக் குமர குருவே!

7 பொன்பூத்த ரத்னமுடி புனைகின்ற சிகரமும்
புண்டரத் திலக நுதலும்
பொழிகருணை விழியும் நவ மணிமுருகு காதினில்
பூண்ட குண்டல வடிவமும்
தென்பூத்த ஷண்முகக் கருணையும் பவளவாய்
சிறுதாள முறுபல் நிரையும்
ஜெயதீப மாலையா பரண மணி மார்பமும்
திருநீறு கொண்ட புயமும்
மின்பூத்த மிடுகுகங் கணமிட்ட கையினில்
வேலுந்துலங்க மயின்மேல்
மேவுசிற்றிடையில் சதங்கையும் பாதார
விந்தமும் காணவந்தேன்
மன்பூத்த சிவசமய சேனாபதிக்குரு
மனோரதப்படி அருள் செய்வாய்

வளர்திருப் பழனிமலை மிசையினிற் குலவு சர
வண பவக்குமர குருவே!

8 கதிதரும் சரவண நதிக்குட் படிந்துதய
காலத்தில் நியமமாகக்
காயத்ரி நெட்டுருக் கொண்டுநிறை வேற்றிக்
கருத்தில் ஷடாட்சரத்தை
துதிசெய்து மூன்றுதரம் உனதுபொன் னாலயம்
சுற்றிவல மாகவந்து
துஜகம்ப மதில் நின்று தியானமும் செய்துபின்
தொழுதுநின் சந்நிதியினில்
அதிகதய வோடுதரு விபூதியினை வாங்கியிரு
அங்கையால் நெற்றிமீதே
அணிந்துலகில் நீடூழி மார்க்கன் எனவளரும்
அழகு லட்சுமி விலாசன்
மதிவதன சேனா பதிக்குரு சிகாமணி
மனோரதப்படி அருள்செய்வாய்!
வளர்திருப் பழனிமலை மிசையினிற்குலவுசர
வணபவக் குமர குருவே!

9 சகல கலை உபநிடத நிலைகண்ட மெய்ஞ்ஞான
ஜனகன் உலகினில் ஜெனித்த
தருவீழி நாதசிந்தாமணியி னைச்சிறிய
தந்தையெனும் உரைகொண்ட மால்
விக சித சுக மலமுகநிதி சுப்பிர மண்ணிய மத
வேட்கிளைய சொர்ணமேரு
விரதமிகு பூசுரன் செப்மலரின் நற்பெயர்
மேயவனை உலகு மகிழ
அகமகிழ மாமன்னென அருமையா யத்தினம்
அளித்திடுங் கருணைவள்ளல்
அமுதகுண பிரகுல திலகசெவ் வந்திமறை
யவன் உதவு புருஷரத்ன
மகந்தரு தயாநிதி சேனாபதிக்குரு
மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர்திருப் பழனிமலை மிசையினிற் குலவு சர
வணபவக் குமர குருவே!

10 புவனரக்ஷகிபெரிய நாயகி சமேதராய்
பூதலச் சீர் மீதினில்

புராதன மதாய் முளைத்திடுகின் சோதி முப்
 புரதகன சூலபாணி
பவளச் சடாமகுட பாலலோசன உமா
 பதி பழம் பதி நாதர் பொற்
பாதபங்கேருக பூஜனை புரிந்தே
 பணிந்தருள் சனற்குமாரன்
தவமுயர்த்திய சிஷர் மணிமகோற் சவ சிவ
 சற்குரு கடாக்ஷமுற்றே
தருதிருப் புனல்வாயில் முதன்மையாய் வந்து
 அவதரித்த சந்தான குரவன்
மவுனசின் மயஞான சேனுபதிக்குரு
 மனோரதப்படி அருள் செய்வாய்!
வளர் திருப் பழனிமலை மிசையினிற் குலவு சர
 வணபவக் குமர குருவே!

குன்றுக்குடி முருகன்.

1 எரிலகு தாடகையை மாரீசனைக்கரனை
 இனிய திரிசிரனை விண்மீ (து)
இருந்திடு கவந்தனை விராதனை அயோமுகியை
 எதிராத ஜயவாலியை
கூரிலகு வச்சிர எயிற்றனை நிகும்பனைக்
 கும்பனொடு அதிகாயனை
கும்பகர்ணனை விகட ஜம்புமாலியை விருது
 கொண்ட இந்திர ஜயித்தைத்
தாரிலகு புயன் இராவணனைத் தடிந்து கோ
 தண்டம் ஒரு கையில் ஏந்தும்
தசரத குமாரரகு ராகவனென வந்தவ
 தரித்திடு முகுந்தன் மருகா!
சீரிலகு சங்கநிதி சேனுபதிக்குரு
 சிகாமணிக் கருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில்மேல் அடர்ந்த கொடிமுடிசூழ்
 சிகண்டிமலை முருகேசனே!

2 மானுழியங்கையினில் வைத்தநின் தந்தைகொடு
 மறலி யலறிட உதைத்தே
மார்க்கண்டன் மேல்தயவு வைத்துமுன் பதினறு
 வயதும் கொடுக்க விலையா?

காறுறு குழலிஉன் தாயன்பு புனைகின்ற
கவிராஜ பண்டிதன் பின்
காசிமட்டுஞ்சென்று அன்னஞ் சமைத்துக்
கனிந்தளித்திட வில்லையா?
மீனுன வடிபன் உன் மாமனும் கவிஞன் மொழி
மீறுது அவன் படுக்க
மின்பாய் சுருட்டிச் சுமந்தவன் பின்னே
விரைந்து சென்றிடவில்லையா?
சேனுபதிக்குரு சிகாமணிக் கருளும் நீ
செய்குவதும் மா பாரமா!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடி முடி சூழ்
சிகண்டிமலை முருகேசனே!

3 கம்பமதயானையின் மருப்பை அழ கொழுகு பொற்
கலசத்தை நிகரிட்ட பூங்
களபத் தனப்பனுவ லாட்டிநா யகனமுத
கலைகொண்ட நளின சந்த்ர
விம்பவதனத்தயனை முன்பிரணவப் பொருள்
விளம்பெனக் கேட்டு அவனும்
விளம்பாத தாற்சிறை யிட்டவன் தன் தொழிலில்
வீரவாகுவை யிருத்தி
உம்பர் பாவும் குலிச பாணிக்கு முடிபுனைந் (து)
உயர் நிலையின் மீது வைத்தே
உரகன்முடி கிடுகிடென நடனமிடு மயிலில் வரும்
உத்தண்ட கோலாகலா!
செம்பொன் மகமோனைய சேனுபதிக் குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்டமணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடிசூழ்
சிகண்டி மலை முருகேசனே!

4 மல்லல் உற்றிடுபாண்டி நாட்டிற் பாங்குன்றில்
வளர் சரவணப் பொய்கையில்
வந்துறற் கீரன் நிஷ்டையிலிருக் கின்ற சிறு
வரையின் மாருத விசையினல்
நல்ல ரசினிலை நீரி னங்கரையில் வீழ்ந்து மீ
னுகவும் பறவை எனவும்
நலந்திழுத்திடர்ப்படல் கண்டுகண் ணுலிந்த
ஞாயத்தினை வியக்க

அல்லல் செம் தலைகை யவரைக் குகை தன்னிலே
அடைத்திடப் பரமன் எனவும்
அழுக்கலை இழுத்துத் தகர்த்துக் கடுஞ்சிறை
அகற்றும் வீரப் பிரதாபா!
செல்லணைய கொடையாளி சேனாபதிக்குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டி மலை முருகேசனே!

5 விண்ணவர் இறைஞ்சமணி மலர்சிந்து தருநிழலில்
வீற்றிருந்திடுவலாரி
விகடபத ஐரா வதம் செய்த புண்ணிய
விசேஷத்தினால் உதித்த
சுண்ணந் திமிர்ந்த கன தனமென் பசுங்குழைத்
தோகை சுர குஞ்சரிக்கும்
துவளுசெங் கதிரொடு செந்தினைப் புனமதில்
துடி மருங் கசைய நின்ற
தண்ணமுத மொழிகயற் கண்ணி இள மானீன்ற
தமனியப் பூங்கொடிக்கும்
தாமமலர் மாலையணி பன்னிரு புயாசலா!
சங்கிராம வேலா யுதா!
தெண்ணிலா ஒழுகுமதி சேனாபதிக் குரு
சிகாமணிக்கு அருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில் மேல் அடர்ந்த கொடுமுடி சூழ்
சிகண்டிமலை முருகேசனே!

6 கந்தா! குறிஞ்சிமலை மன்னா! சிகாவலா!
கார்த்திகேயா! கடம்பா!
காங்கேயா! சரவணபவா! குகா! முருகா!
கயற்கண்ணாள் ஈன்றெடுத்த
மைந்தா! பசுங்குழல் தெய்வ குஞ்சரி வேட
வள்ளி நாயகி சமேதா!
வரைபக மெரிந்தசுடர் வேலவா! ஷண்முகா!
வளர் ஆறு வீடதான
விந்தா! வயங்கு சேவற் கொடி படைத்திடு
விசாகா! தமிழ்ப் பாவலா!
வெங்கய முகத்தண்ணல் சோதரா! தாருகனை
வென்றுவரு தெண்டாயுதா!

சிந்தாமணிப் பிரபல சேனுபதிக்குரு
சிகாமணிக் கருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில்மேல் அடர்ந்த கொடிமுடிசூழ்
சிகண்டிமலை முருகேசனே!

7 மகமேருமுடியிலிடு மணிவிளக் கென்னவும்
வானிரவி மதியுள்ள நாள்
மட்டும் அழியாமலே நிலைபெற்று மென்மேலும்
வளருசற் கீர்த்திபெறவே
புகல்காமதேனு கற்பகவிருக்ஷத்தினும்
புகு சுகிர்த சிந்தாமணி
புனிதநிதி சங்கநிதி பத்மநிதி நீலமுகில்
புகழு மூவேழு வள்ளல்
அகலாமல் ஒருருவதாகச் செவந்தி மறை
யவன் மகன் எனச் செனித்த
அந்தணர் பசுந்தமிழ்க் கவிஞர்மனமகிழநிதி
அள்ளிக் கொடுக்க இந்தச்
செகமீதிலேவந்த சேனுபதிக்குரு
சிகாமணிக் கருள் புரிகுவாய்!
திரண்டமணி முகில்மேல் அடர்ந்த கொடிமுடிசூழ்
சிகண்டி மலை முருகேசனே.

8 எள்ளளவு தானும் மனதிரக்கமில் லாத்தொம்பர்
எனினுமுன் கடைவிழியினால்
ஏறிட்டு நீபார்த்த காலத்தில் அவர்கள்தம்
இடரெலாம் நடுநடுங்கித்
துள்ளித்துடித்துவெண் சுடர்கண்ட பனியெனத்
தொலைந்துவிடுமே! இருப்புத்
தூணும் துரும்புக் கிளைத்திடும் துரும்பொரு
தூணுதும் நின் கருணையால்
வள்ளலே! நின்மகிமை நான் மறைகளாலும்
வழுத்துதற் கெளிதாகுமோ?
வல்லவர்கள் அரிஹர பிரமனும் குலிசனும்
வணங்கு சரணாரவிந்தா
தெள்ளமுதகுணசாலி சேனுபதிக்குரு
சிகாமணிக் கருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில்மேல் அடர்ந்த கொடிமுடிசூழ்
சிகண்டிமலை முருகேசனே!

9 பூமேவு மணிமவுலி யுற்றமுடி யாறும் அற்
புதநுதலில் இடு திலகமும்
பொழியருட் பார்வை ஈராறும் வச்சிரமுருகு
பொற்குழை இலங்கு காதும்
மாமேவு ஷண்முகக் கமலமும் கனிவாயும்
வாகுவிற் கேயூரமும்
மலர்நீப மாலையா பரணநிறை மார்பமும்
வரைதொட்ட செங்கை அயிலும்
நாமேவு தங்கஅரை ஞாண் இட்ட கிண்கிணி
நறுந்துகில் புனை மருங்கும்
நவமணிப் பரிபுரச் சரணமும் காண எந்
நாளும் மயில் ஏறிவந்தே
தேமேவு சுகிர்த நிதி சேனைபதிக்குரு
சிகாமணிக்கருள் புரிகுவாய்!
திரண்டமணிமுகில்மேல் அடர்ந்த கொடுமுடிசூழ்
சிகண்டிமலை முருகேசனே!

10 சத்திரபதி தென் குழந்தாபுரிக்காசான்
தருமுத்த விஜய ரகுநா
தபபோத குருராஜன் இலகு செங்கோல்தனைத்
தாங்கித் தழைத்திருக்க
மத்தகஜ நிறையறிந் திளசையம் பதிதனில்
வந்துதன பதியதாக
வளர்ஏழு நகர்வணிகர் தேன்பாலு மாக ஒரு
மனதாய்ச் செழித்திருக்க
இத்தலமதிற் புத்ர விருத்தியாய் நவரஸம்
இலங்குதமிழ் மாலைகொண்டுன்
இருசரண பங்கேருகம்பணிந்திசைபெற்ற
இருநிதி படைத்திருக்கச்
சித்தபரி சுத்தமிகு சேனைபதிக்குரு
சிகாமணிக் கருள் புரிகுவாய்!
திரண்ட மணிமுகில்மேல் அடர்ந்த கொடிமுடிசூழ்
சிகண்டி மலை முருகேசனே!

முத்தப்பர், தல்லாகுளம் கருப்பர்மீது அகவல் பாடியிருக்கிறார். அந்த நூல் கிடைக்கவில்லை. அந்நூலின் காப்புச் செய்யுள் கிடைத்திருக்கிறது. அது கீழே தரப்பட்டிருக்கிறது.

'சாருலவு திண்புயத்தான் நல்லாகுளத்தில் வளர்
காருலவு மேனிக் கருப்பணன்மேல் — சீருலவு
செஞ்சொல் அகவலுக்குச் சித்தி விநாயகனார்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.'

திருத்தாண்டகம்

சிலையானைப் படையெடுத்த செங்கையானைத்
திகழுறங்காப் புளியானைத் தினமும் சித்ர
முலையார்கள் மடலெழுதும் வடிவத்தானை
முத்திதரும் மெய்ஞ்ஞான மூர்த்தியானைக்
கலையான நறுந்தளப மார்பத்தானைக்
கமழ் பெரிய கறுப்பணனைக் கடாக்ஷத்தானை
மலையாளத் துரையானை என்னுள்ளத்தில்
வந்தானைக் கண்டடியேன் வணங்கினேனே!

முத்தப்பர், தம் வழிபடு தெய்வமாம் கறுப்பண்ண சுவாமி மீது சில பாடல்கள் பாடியுள்ளார்கள். அவற்றில் ஒன்று:-

'திண்ணமுடனேயுனது ஆலயங் கண்டன்பு
செய்துதெரி சித்தவர்க்கு
சிந்தை வியாகூலமேது! அல்லல் வல்வினையேது!
ஜெனன மரணங்களேது!
துண்ணெனத் தலைசுத்தி ஆட்டிப் பிசாசை
நிர்த்தூளி செய்தே சித்தியாய்ச்
சொல்லரிய முப்பூஜை வாங்குமதிகாரனே!
சுகிர்த சாம்ராஜ்ய முதலே!
விண்ணுலகு சிகர கோபுரங்கள் மாடங்கள்
மேன்மைசேர் ஆலயத்துள்,
வீற்றிருந்தருள் செல்வி அங்காளி வாசலில்
மேவுதளபதி ஆகிபா,
வண்ணமால் நேமக் கருப்பனருள் முத்தப்பன்
மைந்தனைப் பெற அருள் செய்வாய்,
வளமிகத் திடுசிங்கை நகர் செழுத்திட நாளும்
வளர் கறுப்பண்ண சுவாமியே!

ஓர் முறை முத்தப்பர், தம் துப்பாக்கியை ஓர் உழவனிடம் கொடுத்து வைத்திருந்தார். அவ்வுழவனிடமிருந்த

துப்பாக்கி, யாது காரணத்தாலோ, முத்துப்பாலாண்டி என்பவரின் உத்தரவுப்படி, முத்துப்பாலாண்டியின் ஆட்களால் எடுத்துச் செல்லப்பட்டது. துப்பாக்கியை இழந்த உழவன் முத்தப்பரிடம் வந்து முறையிட்டான். உடனே முத்தப்பார், அடியிற்கண்ட பாடலை ஒரு சீட்டில் எழுதி, அந்த உழவன் மூலமாய் முத்துப்பாலாண்டிக்கு அனுப்பினுர். அப்பாடல் பின் வருமாறு,-

'அடைக்கலத்தைத் தேவர்கள் ஆதரிப்பதல்லாது,
எடுக்கத் துணிந்தபேர் இங்கில்லை-திடப்புயனும்,
முப்பால் புகழவரும் முத்துப்பா லாண்டி மன்னு என்
துப்பாக்கியைக் கொடுத்துவரச் சொல்லு!'

(உடனே துப்பாக்கி முத்தப்பரிடம் சேர்க்கப்பட்டது.)

மேற்கண்ட சம்பவத்தால், முத்தப்பர் துப்பாக்கியையும் கையாண்டிருக்கிருர் என்று, ஊகிக்கவேண்டியிருக்கிறது.

முத்தப்பர் பாடிய நகைச்சுவை பொருந்திய செய்யுள்:-
'கட்டுப்படாது, கசடு அணையாது, கனத்த சண்டைக்கு
எட்டுப்படாது, எண்ணெய்செல்லாது, இளமாதர்கையால்
கொட்டுப்பட்டாலும் கிணீர்! கிணீர்! என்னுமே!
மொட்டைத் தலைக்குச் சரிவருமோ குடுமித்தலை'

செட்டிமார் நாட்டின் எல்லை
'வெள்ளாறு வடக்காம், மேற்குப் பிரான்மலையாம்,
தெள்ளார் புனல் வைகை தெற்காம்,—ஒள்ளிய நீர்
எட்டிக்கடல் கிழக்காம், இஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு.'

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ சிவமயம்.

ஜெயங் கொண்ட சோழீசர் துணை.

ஜெயங் கொண்டார் சதகம்.

காப்பு.

விநாயகர் துதி.

சீர்பொருந்துந் தென்னேமச் செயங்கொண்ட
திருப்பேர் வாழ்த்திப், [சோழீசர்
பார்பொருந்துங் குறுவிருத்தப் பாமாலை தனிலுலகப்
பழமைச் சொல்லை,
ஏர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப்
இசைந்து கேட்கக் [புவியிலுள்ளோர்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த
காப்புத் தானே [கணபதிதான்

முருகர் துதி.

நகரமெல்லாம் பணித்தேத்துஞ் செயங்கொண்ட
நாயனர் மேல், [சோழீச
மகரநெடுங் கடலுலக வதந்தியைச்செந் தமிழால்யான்
வழுத்து தற்கே,
அகரமுதலவ்வெழுக்தென் றுதியின்முப் பால்சொன்ன
அவன்றுள் போற்றிச்,
சிகரவரை மீதெழுந்த சிறந்தவடி வேலவன்றுள்
சென்னி சேர்ப்பாம்.

கலைவாணி துதி.

சிலைவேளை வென்றபிரான் தென்னேம நகரில் வளர்
செயங்கொண்டார் மேல்.
உலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்ன சொல்லைத்
தமிழாலே யுரைப்பதற்குக்,
கலைவாணி யாகியுல குள்ளமட்டும் படிக்கவந்த
கவிதை தன்னின்,
மலர் வேதன் மனைவியென்றன் மனத்திலிருந்
வழுத்து வாளே [திவ்வுரையை

அவையடக்கம்.

பத்தருளத்தினிற்சூரி தண்டலையென் றெமக்குரைத்த
பரமர் மீதில்,

வித்தகர்முன் னுலகவழக் கத்தையெடுத் தொருநூறு
விருத்தஞ் செய்தார்,
அத்தை நிகரெனச் செயங்கொண்டார் மீதின்
றறிவினாலே, [முத்தையன்சிற்
மத்தகயந்தனக்கு முன்னே சிற்றெறும்பு நடந்ததென
வசனித் தேனே.

நூல்.

வான்மீகர் கதை.

1 நல்வேட வான்மீகர் சப்தரிஷி களைச்சேர்ந்த
ராம மந்த்ரம்,
சொல்லநா வில்லாது கற்றறியா மையின்மரா
வெனமுன் சொன்னார்.
வில்விஜயன் றெவ்வை வெல்லக் கணைதொடுத்த
விளங்கு நாட்டில், செயங்கொண்டார்
கல்விதனக் கழகுகச டறமொழித லெனமுன்னோர்
கழறு வாரே.

இராமர் கதை.

2 அரியோனைக் கௌசிகன்பால் விடமலைத்தான்
டதற் கிலாபம், [தசரதன்விட்
கரியோன்று னதிகசௌந் தரியனுக்குந்
கமலத் தார்க்கும், [தனுவினுக்குங்
உரியோனாகிய மறைதேர் முனியன்றோ?
உலகந் தன்னில், [செயங்கொண்டார்.
பெரியோரைத் துணைக்கொளென்ற ஔவைவாக்
பிசகி ராதே. கியத்திலொன்றும்

சீதை கதை.

3 தேன்மொழிச்சீ தையையரக்கன் சிறையெடுத்துவ
செயலா லுந்தான், [னத்தில்வைத்து
ஆனமட்டும் பார்க்கவவள் கற்பழியா தக்கினியில்
அமிழ்ந்து மீண்டாள்.
மான்விழியாள் சௌந் தரிபாகா செயங்
வளஞ்சேர் நாட்டில், [கொண்டாரே நின்
தான்பதி விரதையானால் தேவடியாள் வீட்டினித்தந்
தரிக்க லாமே.

அகலிகை சாபந்தீர்ந்த கதை.

4 முனியகலிகையைக் கல்லாச் சபித்துநிவர்த்
முறை சொன்னாற்போல், [திக்கும்வழி
மனுவேந்த னாகியரி நடந்திடுந்தாள் படப் பழைய
வடிவா னாளே.
தனவானைத் தோழனென்ற செயங்கொண்டா
தலைநாள் செய்த, [ரேயெவர்க்கும்
அனுபோகந் தொலைந்திடும்போ தவிழ்தமுஞ்சித்
அவனியோரே [திக்குமென்பர்
5 சலியாமல் கடல்தாண்டி மருந்துமலை கொணர்ந்து
மான் தோள்தன்னை, [அனு
நலியாமலிந் திரசித்தன் பாசத்தால் கட்டிவிட்டான்
நலம தான,
கலியாண முரசொலிக்குந் தென்னேமச் செயங்
கனத்த நாட்டில், [கொண்டார்
வலியார்க்கு வலியாரு மிருப்பரென்றே யுலகிலுள்
வசனிப் பாரே. [ளோர்

அருந்ததி கதை.

6 நித்தியசந் யாசியென்றும் நித்தியோப வாசியென்றும்
ரிஷிகள் கூற,
அத்தைமெய்யென் றருந்ததியாள் கங்கைதனைக்
யன்பாய்க் கேட்க, [குரைத்துவழி
சித்தமகிழ் அருந்ததிசொல் தனக்குவழி கங்கை
செயங் கொண்டாரே! [விட்டாள்
பத்தினிஉத் தமிவாக்குப் பலிக்குமெனத்
பணிந்திட் டாரே. [தேவரொக்கப்

விபீஷணன் மகுடம்பெற்ற கதை.

7 வளமையுள ராமனைவி பீஷணன்சேர்ந் திலங்கைமணி
மகுடம் பெற்றான்,
தளரர்க்க ருடனிருந்தே அமர்க்குவந்தா லவனை
சரிப்பா ரன்றோ? [யொக்கச்
களபமணி தனத்திசவுந் தரிபாகச் செயங்கொண்டார்
கனத்த நாட்டில்
நிழலருமை வெயிலிற்போ னால்தெரியு மென்பதுவும்
நிஜங் கண்டீரே.

குசலவன் கதை.

8 மிகப்பெரிய மாலசுவந் தனைப்பிடித்துக் கட்டிவந்த
வினைப்போர் தன்னைப்,
பகற்பொழுதிற் பொடியாக்கித் தாதைதன் வென்ற
பண்பு பாரீர்! [குசன்
செகத்தரசர் புகழுவருந் தென்னேம நாடதிபச்
செயங் கொண்டாரே!
தகப்பனொரு பாக்கெனவும் பிள்ளையொரு தோப்
சாற்று வாரே. [பெனவுஞ்

வாமனன், கண்ணன் கதைகள்.

9 உலகமெலா முடல்சிறுத்துஞ் சிறிய வாமன
ஒரு பாதத்தால், [னளந்தான்
அலகையின்காத் திரங்கவென்ன பாலகிருஷ்ணன்
அவளை மாய்த்தான். [பாலருந்தி
சிலைநுதலாள் சவுந்தரிநா யகியையிடப் பாகம்வைத்த
செயங் கொண்டாரே!
மலைபெரிதா னாலுமென்ன சிற்றுளிக்கும் பயன்
வண்மை தானே. [சனிக்கும்

கண்ணன் மலையைக் குடையாக எடுத்த கதை.

10 கல்லான மாரியையிந் திரனனுப்ப ஆய்ப்பாடிக்
கண்ணர் கம்பு,
வில்லேது மின்றியொரு கற்குடையால் வந்தமழை
விலக்கி னாரே!
செல்லாருங் குழலிசவுந் தரியையிடப் பாகம்வைத்த
செயங் கொண்டாரே!
வல்லார்க்கும் புல்லுமோ ராயுதமா மென்றுலகோர்
வழங்கு வாரே.

பஞ்சபாண்டவர் கதை.

11 அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி செய்
யால் காடாண்டும், [கொடுமை
உரிமையுடன் தருமர்செய்த நன்றியினால் திரும்பவும்
துலகை யாண்டார், [வந்
பருவரைவில் லாய்வளைத்த செயங்கொண்டா
பண்பாய்ச் செய்த, [ரேயெவரும்

தருமே தலைகாக்கும், அதர்மமேஅழித் திடுமெனவும்
சாற்று வாரே.

சருமர் கதை.

12 ஆளைப்போல் வருமிருகந் தனக்கும்வீ மனுக்கும்
கான நியாயம், [வழக்
வேளைக்கா தரவுதர்மர் வீமனுடல் பாதியிரு
கத்திற் கென்றார்,
வேழப்போர் வையைத்தரித்த செயங்கொண்டா
வெல்லம் போட்டு, [ரேசேனி
நாழிப்பால் வார்த்தாலும் நடுச்சொல்வா ரறிவுமிகு
நடுவுள் ளோரே.

அர்ஜுனன் கதை.

13 பண்டுகிணற் றினிலெறிந்த பௌத்திரத்தைத்
பாணம் போட்டு [துரோணர்சிலைப்
கொண்டுவரக் கண்டதனஞ் சயனுமந்த விற்றொழில்
கொண்டா னன்றோ? [கைக்
வண்டுவிழியு மைபாகா செயங்கொண்டா ரேயுமது
வளஞ்சேர் நாட்டில்,
கண்டதைக்கற் கின்றவனே பண்டிதனு வானென்றே
கருது வாரே.

கண்ணன் கதை.

14 பார்த்தனுக்கே ரதமூர்ந்தோன் மூத்தபல பத்திரனைப்
பாரைச் சுற்றென்(று)
ஏய்த்தனுப்பித் தன்னைச்சார்ந் தோரைரக்ஷித்
திருந்து வாழ்ந்த, [தண்ணனைச்சார்ந்
நூற்றுவரை மடியவுஞ்செய் தான்செயங்கொண்
நுவலக் கேண்மோ, (டாரேநீர்
மூத்ததுவே மோளையென்றும் இளையதுவே காளை
மொழிகு வாரே. [யென்றும்

கருடன் கதை.

15 விருப்பமறை யோன்றனக்குப் பிறந்தநிரு தனை
விழுங்கும் வாயில், [யுவணன்

நெருப்பெழச்சுட் டதனாற்செங் கருடன் நிருதனை
எனஓர் பாட்டில், (விடுத்தான்
திருப்பதிவேங் கடசதகம் தனிலுரைத்தார் முன்
செயங் கொண்டாரே! (பெரியார்
நெருப்பிருப்ப தறியாமல் தொட்டாலுஞ்
நிகழ்த்து வாரே. [சுடுமெனவே

கர்ணன் கிண்ணம் கொடுத்த கதை.

16 வாழிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக் கொடுக்கு
மனம் வேறுமென் (று) [முன்னே
ஏழைமறை யோர்க்கிடக்கை யால்எண் ணெய்க்
ஈந்தா னன்றோ! [கிண்ணம்
ஆழிதனிற் பள்ளிகொள்ளும் மால்பணியும்
செயங் கொண்டாரே! [பொற்பாதச்
நாளையென்பார் கொடைதனக்குச் சடுதியிலே
நல்ல தாமே [இல்லையென்றல்

பாரதக் கதை.

17 விதுரன்வில் முறித்தான்கன் னனும்பாம்புக்
விட்டா னில்லை, [கணை திரும்ப
எதிரிபடைத் தனைத்துரியோ தனன்செயிக்கப்
இணங்கி னாரே, [படைத்தலைவர்
மதுரையிலிந் தனம்வளையல் விற்ற செயங்
மருவார் போரில், [கொண்டாரே!
குதிரைநட வாவிடின்மா வீரர்பறந் திடுவாரோ
கொக்காய்த் தாமே

சூரியனைச் சக்கரத்தால் மறைத்த கதை.

18 வாணிமாது வன்தோழன் இறவாமற் காக்கவென்ன
வகைசெய்வோ மென் (று)
ஆணியிர வியைத்திகிரி யால்மறைத்துப்
தருளினாரே, [பார்த்தனைக்காத்
நாணரவால் பொன்மலையை வளைத்த செயங்
நலஞ்சேர் நாட்டில், [கொண்டார்வாழ்
வேணுமென்று நூற்றல் மெல்லியநூலாய்
மெய்ய தாமே. [நூற்றிடுவர்

கிருஷ்ணன் ஐவரைக் காத்த கதை.

19 வள்ளல்கன்னன் கைநாகக் கணைப்புலன்மா
மாதாவைப் போய், [லறிந்தவன்றன்
பிள்ளைகள்மேல் நாகமொரு தரம் விடப்பால்
பேசச் சொல்லித், [திறுத்தெனவும்
தெள்ளியபஞ் சவருயிரைக் காத்தார்தென் னேமநகர்ச்
செயங்கொண்டாரே!
வெள்ளம்வரும் முன்அணையைக் கோலிவைப்போர்
காரியங்கள் மிகநன்றுமே.

சுப்பிரமணியர் கதை.

20 அண்ணலருள் சரவணவேள் புனக்குறப்பெண்
அவதி பார்த்து, [வெயிலில்நிற்கும்
தண்ணுலவு வேங்கைமர நிழலா லன்றவள்வருத்தந்
தததனைத் தீர்த்தாரே,
விண்ணவர்க்காய் விடத்தையுண்ட செயங்
தான் — விளங்குநாட்டில், [கொண்டாரேகனங்
பெண்ணென்றால் பேயுமொக்க இரங்குமென
பேசு வாரே. [உலகுள்ளோர்

சுப்பிரமணியர் மீனன கதை.

21 மிஞ்சியசெவ் வேள்சிவனார் மந்திரத்தை யொளித்
விளவிக் கேட்க, [திருந்து
பஞ்சமுகன் சபிக்கவுகன் மீனகிக் கடலில் மெற்றப்
பட்டுத் தீர்ந்தான்,
செஞ்சரணத் தால்யமனை வென்ற செயங்
தேவ ரேனும், [கொண்டாரே!
வஞ்சகம் நெஞ்சைப்பிளக்கும் இதுபொய்யல்ல
வசனந் தானே. [உலகில்நிச

அரிச்சந்திரன்

22 செப்புமரிச் சந்திரந்தான் நீசனுக்கே விலையாகிச்
சென்றே நெஞ்சம்,
ஒப்பிமயா னமுங்காத்த நிமித்தியத்தா லிழுக்கவனுக்
கொருபோ துண்டோ!
மைப்படியுங் கண்ணி சவுந்தரிபாக
வளஞ்சேர் நாட்டில், [செயங்கொண்டார்

குப்பையிலே கிடந்தாலும் குன்றின்மணி
குறைவுறாதே. [நிறத்திலொன்றுங்

மிருகண்டர் கதை

23 மதிமேதுவா லொருநூறு வியன்மதியாற் பதினாறு
வயது புத்ரன்.
எதுதருவோ மெனச்சிவனே நல்லபிள்ளை வயதீரெட்
டிருந்தால் போதும்,
அதுதருவீ ரென்றுமிரு கண்டுமுனி அன்றுரைத்தார்
செயங் கொண்டாரே!
இதசாணி யொருகூடை மிக்கசவ்வா
எடையென் பாரே. [தோர்பணத்தின்

திருவிளையாடற் புராணக் கதை.

24 பெண்ணிறக்கத் தொங்கலம்பால் வில்வேட
பெண்ணுக் காளன், [னடுத்துவரப்
கொன்றதுநீ என்றிழுக்க மதுரையிற்சுந்தரர்
கொடுத்துத் தீர்த்தார், [நியாயங்
அண்ணலரனே செயங் கொண்டாரோகா தாரக்கேட்
டதும் பொய்யாகும்,
கண்ணாரக் கண்டதுப்பொய் தீரவிசாரிப்பது மெய்
காணுந் தானே.

விநாயகர் மாங்கனி பெற்ற கதை

25 வேய்க்குமகன் மூத்தபிள்ளை கரத்தினில்மாங்
வெகுண்டு வேலர், [கனிகொடுக்க
வாய்க்கினிய கனிநமக்குத் தரவிலென்று
மலைமேற் சென்றார், [கோபமுடன்
பாக்கியஞ்செய் தமிழ்க்குதவும் செயங்கொண்டா
பழனந் தோறும், [ரேவிரைத்த
தாய்க்கு விளைந்தாலுமென்ன தனக்குவிளைந்
தவஞ் செய்வாரே. [திடவேண்டித்

மாணிக்கவாசகர் கதை

26 அத்தன்கையா லெழுதவுமை விளக்கேந்த வூர
னென்று கூறும்,

நற்றிருச்சிற்றம் பலக்கோவை மதுரைச் சங்கத்தார்
நாலி லொன்று,
குற்றமெனத் தள்ளினர்சற் றும்பயமில்லாமல் செயங்
கொண்டாரே சொல்,
வித்துவான் மதயானை யிரண்டுமொப்பென் [றுரைப்பதுவும்
மெய்ய தாமே.

திருஞானசம்மந்தர் கதை

27 பண்ணுருங் கவுணியர்வி பூதியினுல் வழுதிசுரம்
பாதி தீர்த்தார்.
எண்ணுயிரஞ் சமணர் திருநீற்றை மறந்துகழு
வேறி மாய்ந்தார்,
பெண்ணுளைச் சடையில்வைத்த செயங்கொண்டா [ரேயுலகில்
பெருமை சேர்ந்த
வெண்ணீறே வினையகற்றும் தரிப்பவர்க்குச் [சிவகதியும்
மேவுந் தானே.

இளையான்குடி மாற நாயனுர் கதை

28 உழுதிளையான் குடிமாறர் முளைவாரி யன்னமன்பர்க்
குதவிப் பாரில்,
வழுவாத கீர்த்தியுட னொருநாளுங் கேடில்லா
வாழ்வு பெற்றுர்.
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார் [வளநாட்டின்
மறைகளோதித்
தொழுவாரெல் லாமுழுவார் தலைக்கடையி [லென்றுலகஞ்
சொல்லு மாதோ.

விறன் மிண்ட நாயனுர் கதை.

29 ஆரூரெல் லையின்மிதியேன் என்றவிறன் மிண்டர்தனை
அரன் சோதித்தப்,
பாரிலொருகான்மிதிக்கச் செய்துகண் டக்காலைப்
பதறி யீர்த்த,
சீருவந்து சிவன் காக்ஷி கொடுத்தானன் றேநேமச்
செயங்கொண்டாரே!
பேருலகல் மனங்கலங்கிப் பிரியாமல் பிடித்தவர்க்குப்
பேறுண் டாமே.

சீவகன் கதை.

30 பெலமுற்ற சிங்கமொரு கன்றீனும் படியெழுதிப்
பின்னே செம்பொன்,
விலைபெற்ற கரியையரிக் கன்றுதுள்ளிப் பாய்ந்தகதை
மெய்யா மென்றே.
சிலைபெற்ற கூளேந்த்ரன் விறலிதனில் விளங்குதன்றோ
செயங் கொண்டாரே!
குலவித்தை கல்லாமற் பாதிவரு மென்றுலகோர்
கூறு வாரே.

மனுநீதிச் சோழன் கதை.

31 முன்னொருசோ ழன்புதல்வன் தேர்க்காலி லான்கன்று
முறியக் கண்டே,
பின்னதற்கி டாய்த்தனது பிள்ளையைத்தேர்க்
பெருமை சேர்ந்தான். [காலிவிட்டுப்
தென்னேம நகரில்வாழ் சவுந்திரநா யகிமகிழ்ந்த
செயங் கொண்டாரே!
தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணுவர்தே
தமக் கொப்பாரே. [வர்முனிவர்

பாண்டிய ராஜன் கதை.

32 மதுரைமன்ன னிடத்திருந்த குதிரைபற்று தென
மா அனேகம், [விலைக்கு
இதமுடன்சே கரித்தநிமித் தியத்தால்முன்
இழந்தா னன்றோ! [பரிமுழுதும்
நிதியனைத்தோ ழமைவேண்டும் செயங்கொண்ட
நிறைக்க வேண்டிப், [ரேஏரி
புதியவெள்ளம் வரப்போய்முன் னிருந்தவெள்ளத்
போன வாறே. [தையுமிழுத்துப்

பஞ்ச தந்திரக்கதை.

33 திறமுளசஞ் சீவகனைத் தமரகன்கண் டழைத்துவந்து
சிங்கத் துக்கும்,
இறையுளமந் திரியாக வைத்தபின்சிங் கந்தனக்கும்
இடபத் துக்குங்,
குறைவில்பகை யுண்டுபண்ணி விட்டதன்றோ!
குலவு நாட்டில், [செயங்கொண்டார்
உறவுதனைப் போலிருந்து குளவியைப்போல்
உண்டேன் பாரே. [கொட்டுவர்கள்

உருக்குமாங்கதன் கதை.

34 நன்னிலத்தி லுருக்குமாங் கதராஜ னொருவிரத
நடத்தினா னெற் (று),
அன்னகரு மவ்விரதந் தொடங்கியதால் யமனவரை
அணுகக் கூடா (து),
என்னயம தண்டனைசே ராதிருந்தார் செயங்
இலகு நாட்டில், [கொண்டார்
மன்னவனெப் படியோமன் னுயிருமந்தப்
வழுத்து வாரே. [படியெனவும்

நளன் கதை.

35 அடவிசென்று நகரிழந்து வறுமைதங்கியுடல்
அம்மானார்வந், [மெலிந்தே
திட்வுமம்மான் ஏவலினால் அமைச்சரழைத் திடவருவ
திலையோ! என்ற,
திடநளனை மாமனெதிர் கொண்டழைக்கச்
செயங்கொண்டாரே! [சம்மதித்தான்
கடுகுசிறுத் தாலுமென்ன காரம்போ காதெனவுங்
கழறு வாரே.

அச்சுதவாணன் கதை.

36 வேணியர ணைப்பணியும் அச்சுதவா ணக்குரிசில்
வெள்ளாண் மைச்சீர்,
ஆணிவல் லமையான்மூ வேந்தரையுங் காவலில்வைத்
தவதி செய்தான்.
பாணிமழு வணிசெயங்கொண் டாரே! எத்
பழுதுண் டேபார், [தொழில்களுக்கும்
காணியைநட் டுக்களத்தில் நிற்பதுவே நன்மையெனக்
கருது வாரே.

மணியடித்த கதை.

37 சாத்திரவேதியர் வதிட்டர் தருமரது சத்திரத்தில்
சலச் சோறுண்ட,
மாத்திரத் தேலக்ஷமறை யோர்புசித்தா லாடுமணி
மலிந்தா டிற்றே.
நேத்திரத்தா லனங்கனுடல் தனையெரித்த
நிமலர் நாட்டில், [செயங்கொண்டார்
பாத்திரத்தை யறிந்து பிச்சையிட வேண்டு
பகருவாரே. [மென்றுலகோர்

கருணாகரன் கதை.

38 சுற்றிமதிற் கலிங்கசிந்து சூழுசிக் காந்தமெனும்
துருவந் தன்னை,
எத்தும் விலைமாதர்களால் பண்டுகருணாகரன் வென்
றிட்டா னன்றோ?
கைத்திகிரி யோன்பணியும் செயங்கொண்டாரே!
கருத்துண்டான, [மிகுந்த
புத்திமான் பலவானுவான் என்றுலகோர்
பொருந் துந்தானே. [சொல்லுவதும்

குமணன் கதை.

39 சிம்மாச னன்குமணன் சிரம்போல விழிமூக்குச்
செவிவாய் செய்து,
சம்மாரம் பண்ணிரத்தச் சொரிசிந்தக் கொடுத்ததுவுந்
தட்டா னன்றோ?
பெம்மானே தென்னேமச் செயங்கொண்டாரே!
பிரட்டுங் கையான், [மலையைப்
கம்மாளன் பசுவைத்தான் காதறுத்துக் கொள்ளு
கழறு வாரே, [மெனக்

பட்டினத்தார் கதை

40 கையினிற்பட் டினத்தார்க்குத் தமக்கைநஞ்சு
காரஞ் செய்தே, [கலந்துபல
ஐயமுறக் கொல்லவென்றே கொடுக்கஅவள் மனை
அழிந்த தன்றோ! [நெருப்பால்
துய்யபினு கச்சிலையீர் செயங்கொண்டாரே!
துண்பங் காணச், [பிறர்க்குத்
செய்ததீ வினைதானும் செய்தவர்க்கே சேருமெனச்
செப்பு வாரே,

விக்கிரமாதித்தன் கதை

41 சிந்தைமகிழ் விக்கிரமா தித்தனுக்கா யிரவருஷம்
தேவி யீந்தாள்,
புந்திவலு மந்திரிசொல் வாலிரண்டா யிரவருஷம்
புவியை யாண்டான்.
சுந்தரர்க்குத் தூதுசென்ற செயங்கொண்டாரே!
துலங்கு நாட்டில், [தருமந்
மந்திரங்கால் மதிமுக்கால் என்றுலகந் தனிலுள்ளோர்
வழுத்து வாரே.

காளிதாசன் கதை

42 ஸிசகாளி தாசனரண் மனைவாயிற் புகவேண்டி
நிருபன் கீர்த்தி,
சுகநாசிபல் போலென் றுரைத்தனாற் செலவிட்டார்
தோன்றப் போவென் (று)
இசைவாங்கீர் வாணம்போசன்றன்மேல் பகர்ந்தனன்
செயங் கொண்டாரே! [காண்
பசுமாட்டுத் தோலதனைப் புலிபோர்த்துக்
பண்பு தானே. [கொண்டிருந்த

செங்நாப் புலவர் கதை.

43 உற்றசெங்நாப் புலவர்வழிக் கணிகணன்தான்
உலகுண் டோனை, [கோபமதாய்
இற்றையாம் புறப்படுவோம் இனியுன்பாய் சுருட்டி
திருமென் றோதச், [யெழுந்
சித்தசன்றன் றுதைவர தப்பெருமா ளெழுந்தனரே
செயங் கொண்டாரே!
பத்தருளத் தினிலீசன் குடியிருப்பா ரெனச்
பண்பு தானே. [சொல்லும்

சத்தி முத்தப் புலவர் கதை

44 பார்புகழும் பாண்டியர்க்குச் சங்கத்தார் பேரறிவால்
பகர வொண்ணா,
நாரைமூக் குக்குவமை பனங்கிழங்கென் றொரு
நவின் றானன் றோ! [புலவன்
சீருலவு கங்கைதிங்கள் அரவமொடு கொன்றையணி
செயங் கொண்டாரே!
காருலவும் புவியிலுள்ளோ ராகாயந் தனையும்வரை
கட்டு வாரே.

தக்கன் கதை

45 கயிலைத்தா னவைப்போலே மறுசிவனை யுண்டு
கருதித் தக்கன், [பண்ணக்
செயலற்றே செய்வேள்வி யுந்தொலைந்து வேற்றுமுகஞ்
சேர்ந்தா னன்றோ!
அயிலைப்போல் விழியுமைசேர் செயங்கொண்டா
அவனி மேலே, [ரேயிந்த
உயரத்தான் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகா
துண்மை தானே.

இந்திரன் நளனைத் தூதுவிட்ட கதை.

46 வனத்திறையிந் திரனளன்பாற் சென்றுக்கு வருமான
மாதைத் தானென்
றனக்குவரும் படிபேசித் தமயந்தி தனையிணக்கித்
தாவென் றாற்போல்,
சினக்குமர வணிந்தடியார் மனக்கவலை தீர்த்தருளுஞ்
செயங் கொண்டாரே!
உனக்குமழை பெய்யுமிப்போ தெனக்கிறவை
றுரைத்த வாறே. [நீர்தாவென்

மார்க்கண்டர் கதை

47 அருமறைமார்க் கண்டர் நித்தந் திருக்கடவூர்
அன்பாய்ப் பற்றி [வேணியனை
வருசமன்றன் பகையடக்கித் தீர்க்காயு ளாய்ப்புவியில்
வளர் கின்றாரே!
தருவைநிகர் தென்னேம நகரில்வளர்
தமிழ்சேர் நாட்டில், [செயங்கொண்
பெருமரத்தைச் சுற்றிநின்ற அல்லியுஞ்சா காதெனவே
பேசு வாரே

அறிவீனன் அரசனைப் பாடிய கதை

48 அறம்பெற்ற சோழனை மண்தின்னிமரப் பாவை
அதிலோர் பாட்டாய், [யென்று
வெறும்பித்தன் சொல்லஅந்த வேந்தர்சபை யோர்கள்
விளங்கச் சொன்னார். [பொருள்
திறம்பெற்ற பரிசுகொண்டான் தென்னேம நகரில்
செயங் கொண்டாரே! [வளர்
எறும்புக்குந் தன்கையா லெண்சாண்மெய் யென்றுல
இயம்பினாரே. [கோர்

புஷ்கரன் நளனைச் சூதாட அழைத்த கதை

49 காவலன்புஷ் கரனளனைச் சூதாட வரவழைத்த
கபடம் கண்டே,
மேவியசூ தாடாமல் தள்ளிவிட்டால் சனிநளனை
வினைசெய் வானோ?
வாவிதிகழ் தென்னேமச் செயங்கொண்டாரே!
வளஞ்சேர் நாட்டில் [மிகுந்த
நாவிதன்செய் தியையறிந்து குடுமியைப் பத்திரப்
நலமென் பாரே [படுத்தல்

வரரிஷி கதை

50 சிவயோகர் வெகுளியினால் வரரிஷியு மகிஷமெனச்
சனித்தான் பாரில்,
பவமடியாற் கற்றவுமை லிங்கப்பிரா ணியையவதைத்த
பழியின் தோஷம்,
நவதீர்த்தமாடி யன்றோதொலைந்த தென்பார்
நலஞ்சேர் நாட்டில், [செயங்கொண்டார்
தவமுடையோர் மனமழுங்கச் செயப்படா தென்றுல
சாற்று வாரே. [கோர்

வேடன் கதை

51 அடவியில்வே தியர்க்கொருவே டன் றினைமாப்
ஞற்கா சிக்கு, பகுந்த பல
திடமுளமன் னவன்சேயாத் தினையரியப் பொற்
சனித்தா னன்றோ! [கலத்தில்
வடவரையைச் சிலையாக வளைத்தசெயங் கொண்டாரே
வையந் தன்னில்,
இடுவதுபிச்சை பின்பு பெறுவதுவே மோக்ஷமென
வியப்பு வாரே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ சிவமயம்.
பாடுவார் முத்தப்பர்,

எழு நகரத்தார்மேல் பாடிய, திருமுக விலாசம்.

காப்பு (நேரிசை வெண்பா.)

இருநிதியம் சேருகின்ற எழு நகரத்தார்மேல்
திருமுக விலாசமது செப்ப — அருளாற்
குணபதியா மீசன் குழவியென உற்ற
கணபதிபொற் றுள்மலரே காப்பு.

நூல் (கவி வெண்பா)

1 கங்கை நதிதரித்தோர் கண்ணுதலார் சூரனுக்குச்
சங்கையிலா வாழ்வு தனைக்கொடுக்க - அங்கவனும்
2 தேவாதி கட்கிடுக்கம் செய்ததனுல் இந்திரன்பால்
தேவாதகள்பலவும் சென்றடர்ந்து - பூவாளி

3 வேளை யரனிடத்தில் மேவிச்சுரர் இடுக்கம்
தூளாய்ப் பறந்திடவே சொல்லுமென்றார் - வேள்
[சிவன்பால்
4 சென்றா னமரர்சொன்ன செய்தியெல்லாம் ஈசன்
[முன்பு
நின்றாங் குரையான் நகரில்மதன் - மன்றல்மிகு
5 பூவாளி அச்சிவன்மேல் பொங்குமழை போல்நின்று
தூவினான் ஈசனிவன் துஷ்டனென்றே - தாவிமதன்
6 தன்னை யெரித்திடவே தானவரும் வானவரும்
பன்னுஞ் செபதபஞ்செய் பண்ணவரும் - தன்னிலை
[விட்(டு)
7 ஓடினார் அந்நாள் ஒருகோடி சென்றபின்பு
கூடினார் இந்திரன்பால் கோவென்றே - கூடுமுன்னே
8 சத்தரிஷி மாதர் தமக்கக் கினிபகவான்
மெத்தமயல் கொண்டவன் றன்வீட்டில்வந்து -
[சித்தம் நொந்தே
9 அன்னமருந் தாதிருந்தான் அவன் சுவாகாள்
என்னவென்றாள் உள்ளதி யம்பினான் - நன்னயமாய்
10 என்றன் றிராணி இனியறிவீர் சத்தரிஷி
துன்று மடவார் களுன்னைத் தோயவே - ஒன்றுமுத்தி
11 செய்வனென்றாள் நல்லதெனச் சிந்தைமகிழ்ந்
[தக்கினிதான்
மெய்ப் பொடித்துச் சத்தரிஷி மின்னாரின்-
[மைவிழியாள்
12 ஆறு ரிஷி மாதர்வடிவாகினா ளச்சுவாகாள்
தேறவொண்ணா ஆசைதனைத் தீர்ப்பையென்று-
[கூறிடவே
13 ஒவ்வொருத்தியாய்ச் சென்று உலகத்தில் தன்மனசு
செவ்வை யொத்துக் கொண்டு மயல்தீர்த்தனனே திவ்ய
14 அருந்ததியைப் போலவடி வாகமாட்டா துள்ளம்
வருந்திக் கனவனிடம் வந்தாள்--திருத்திழையாள்
15 இன்னொருத்தி எதுவா வில்லையென்றா னுள்ளபடி
சொன்னவற்றைக் கேட்டுத் துயர்தீர்ந்தான்—
இந்நிலத்தில்
16 சத்தரிஷி ஞானதிருஷ்டி தன்னாலறிந்து கம
லத்துமட வாரை யருகழைத்துச்—சத்தி
17 அருந்ததிகற் புக்கங்கள் ஆறுபேர் கற்பும்
பரிந்துபற் றாதென்று பகர்ந்து—திருந்தும்

18 சரவணப் பொய்கைக்குள் தபசுசெய் வீரென்றே
அரிவயரைப் போமென் றனுப்பத்–திருநுதலார்
19 சத்தரிஷி வாக்கால் சரவணப்பொய் கைக்குள்வந்து
சத்தியமே எண்ணித் தவஞ்செய்தார்-உற்றதெய்வம்
20 மன்னவனும் தேவர்களும் வந்தக்கினி பகவான்
தன்னை அரு கழைத்துச் சாற்றினார்-என்னவென்றால்
21 சூரன்செயு மிடுக்கன் சோமன் தரித்தவர்பால்
நீருரைத்து மீளுமென்றார் நேசமாய்ச்–சீருடனே
22 செல்லுமுன்னே மாலாய்ச் சிவனுமிடப் பாக
மெல்லியலு மொன்றான வேளையிலே-மெல்லநடந் (து)
23 அக்கினியோன் பொற்கதவை அண்ணினான்
[மெய் வெளிச்சம்
மிக்கச் சுடர்போலே விளங்கியதால்-திக்கெனவே
24 சங்கரரும் அக்கினியோன் தன்னைக்கண்டே மனசு
சங்கோசமாய் விரைந்து தாமெழுந்தார் - அங்கவர்க்கு
25 விந்துபிரவேசிக்க வீறுமெழிலக்கினியே
வந்துகையில் ஏந்துளன வழுத்தினார் - அந்த
26 அரன்விந்தைத் தாங்கிநின்ற அக்கினியோன் தன்னைத்
திறமாக இந்தவிந்தைச் சீராய் - உரமாக
27 தாட்டிக மாய்க்கொண்டு சரவணப்பொய்
[கைக்குளிதைப்
போட்டுவிடும் என்னப் புகன்றார்கள் -கேட்டவனும்
28 அக்கணமே விந்துதன்னை யந்தச் சரவணப்பொய்
கைக்குள் இட்டுவந்தான் கருணையுடன் - மிக்கவிந்தும்
29 ஆறு குழந்தைகளாய் அக்கங்கையிற் பிறந்து
மீறி விளையாடும் வேளையிலே - கூறிய
30 ஈஸ்வரும் ஈஸ்வரியும் ஏகாந்தமாக அந்த
வாசமா மந்நதியில் வந்திடவே - ஈஸ்வரிபார்த்து
31 இந்நதி யிற்குழந்தை ஏதென்றாள் தேவர்பிரான்
உந்தன் குழந்தையென்றார் உண்மகிழ்ந்து - விந்தை
[யுடன்
32 ஆறுதலை யும்சேர்த்து ஆவலுட னாசை
மீறியெடுத்து மடி மீதில்வை வத்தே - ஆறிரண்டு
33 காலும் உருவும் இருகாலாக்கச் சேர்த்தெடுத்து
வேலுமொன்றாய் மிக்ககரம் பன்னிரண்டாய்ச் -
[சீலமுடன்
34 ஆறுசிர சாய்த்தேவர்க் காறுதலையானப் பேர்
ஆறுமுகம் என்றே அரனுரைக்க - வீறும்

35 உமையும் திருமுலைப்பால் ஊட்டிக்கொடுபோம்
சமையத்தி லங்கே தவஞ்செய் - அமைநிகர்தோள்
36 சத்தரிஷி மாதர் அரன் தாள்பணிந்து தங்களுக்கு
புத்தியென்ன வென்று புகன்றார்கள் - அத்தரும்
[பார்த்(து)
37 இந்தக் குழந்தையைக் கேள்என்ன அவர் கேட்கச்
சிந்தை மகிழ்மதலை செப்புமன்று - முந்துலகில்
38 கார்த்திகை நட்சத்திரங் கருதுவொர் தங்கள்வினை
மாற்றிஅவர் கேட்டவரம் கொடுப்பேன் -
[கார்த்திகைநட்
39 சத்திரப் பதவியிலே செல்லுவீரென்று துயர்
ஆற்றி மடவாரை அனுப்புவித்துச் - சூத்திரங்கள்
40 செய்தசுவாகாள் தனக்கும் செவித்தோர் தங்களுக்கும்
மெய்யிலங்குபீ டையொடு விக்கினங்கள் -எய்துகின்ற
41 போதிவையெல் லாந்தீர்ந்து போகச்சு வாகாளென்று
ஓதஉடனே பயங் கொண்டோடுமே - ஆதலினால்
42 இந்தப் பெருமை உமக்கென்று அவர்சொல்லச்
சிந்தை மகிழ்ந்து சிவன்உமையும் - பிந்தாது
43 எடுக்கி இருகரத்தால் ஏந்தியுமையாள் பால்
கொடுக்க வளர்ந்த குமரேசா - மடுக்கரையில்
44 வண்டாடும் பூங்கமல மாதுவிளை யாடிவளர்
குன்றாக் குடியிற் குமரேசா - சென்றன்று
45 வீறும் அசுரர்குலம் வேரறுத்துச் சூரனுடல்
கூறாய்ப் பிளந்த குமரேசா - தாரணியில்
46 அற்றவர்க்குத் தாரகமாய் அண்டர்கள் நாட்டுக்குக்
கொற்றவனாய் வந்த குமரேசா - உற்றசுடர்
47 அம்பனைய கண்ணாள்தெய் வானைகுற வள்ளிஇரு
கொம்பனையர்க் கேற்ற குமரேசா - நம்புதலாய்த்
48 தேடுமடி யார்தமது சிந்தைதனி லேயிருந்து
கூடிவிளை யாடுங் குமரேசா - தாடாண்மை
49 அன்றசுரர் நெஞ்சம் அதிர்கனக வேல்வாங்கிக்
குன்றுருவ எய்த குமரேசா - மன்றுள்
50 நலத்தையறி யாச்சமணர் நாலா யிரரை
கொலைக்கழுவி விட்ட குமரேசா - பலத்தெழுந்து
51 நீலநிறச் சேவல்தன்னை நித்தங்கை யிற்பிடித்து
கோலமயிலேறுங் குமரேசா - சாலவே
52 மிடிதீர்த்து அமரர்தமை மிக்கதெய் வலோகம்
குடியேற் றிவைத்த குமரேசா - படிபுகழும்

112717

53 சந்திர சேகரர்க்கும் தையல் சௌந்தரிக்கும்
சிந்தை களிகூரவந்த சேயனே - அந்தம்உயர்
54 மால்மருகா கங்கைமகனே வேள் மைத்துனனே
வேல்முருகா யாவருக்கும் மெய்ப்பொருளே -
[தான்சேர்

55 ஒருமான் மகள்தனுடன் உற்றதெய்வமங்கை
இருமா தருக்கும் இறைவா - கருணைதரும்
56 மும்மூர்த்திகள் தமக்கும் மூர்த்தியே நால்வேதச்
சிம்மாசனத்திருக்கும் தேவனே - செம்மைமிகும்
57 அஞ்சுமுகன் உதவும் ஆறுமுகனே எழு
மஞ்சுலவு மங்கை மலையோனே - ரஞ்சிதமாய்
58 எட்டானைக் கொம்பை நெஞ்சில்எற்றி ரத்னப்
[பந்திகளைத்

திட்டமுடனே யழுத்துஞ் சேவகத்தில - கெட்டி
[யெனும்

59 பத்துமுடி ராவணனைப் பட்டுருவ வாளிதொட்ட
கைத்திகிரியோன் மருகா காவலனே - இத்தரையில்
60 தன்னந் தனித்தவர்க்கும் சாலப்பசித் தவர்க்கும்
அன்னங் கொடுத்தா தரிப்பவனே - இந்நிலத்தில்
61 கார்த்திகை நட்சத்ரம் கருதுவோர் சஞ்சலத்தை
தீர்த்துப் பலன்பெருகச் செய்பவனே - சாற்றரிய
62 சஷ்டி விரதம் தனையனுஷ்டிப் போர்கள்தமை
மட்டிலா பாக்கியத்தில் வைப்பவனே - திட்டமுடன்
63 சோமவா ரத்தைத் துதிப்போர்கள் தம்மனதில்
நேமமதனைக் கொடுக்கும் நேயனே - பூமிபுகழ்
64 வெள்ளிக்கிழமை விரதமுற்ற பக்தர்கள் தம்
உள்ளத்திலே யிருக்கும் உத்தமனே-துள்ளும்
65 தந்திமுகம் படைத்துச் சப்பானியா யிருக்கும்
தொந்தி வயிற்றோனுக்குச் சோதரா-சந்ததமுஞ்
66 சித்தசனார்க்கும் திசைமுக னுக்கும் சிறந்த
மைத்துனனாய் வந்த மயில்வாகனா - எத்திசைக்கும்
67 வீறுதிருச் செந்தூர் மிக்கபரங் குன்றம்முதல்
ஆறுபடை வீட்டுக் கதிகாரா-நீறணியும்
68 அக்கினிக் கண்ணன் கைலை யம்பதியாம் ஈசனருள்
கைக்கனிக்குச் சுற்றிவரும் காங்கேயா-திக்கடவி
69 மானுக்கும் பூமிமடமானுக்கும் சீதை யெனும்
மானுக்கும் மிக்க மருகனென்றே-மீனமதித்
70 தேரடியில் நின்றதெல்லாம் செப்பினேன் கேட்டு

கூரிய வேற்கையான் குமரேசன்-பார [வெற்றிக்
71 இடும்பேச னைக்கூவி இப்பொழுதே சென்றங்கு
அடிவாரத்தே யொருவன் ஆரோ—திடமாகப்
72 பன்னுதமிழ் நம்மேல் பகர்கின்றான் நீவிரைந்தே
அன்னவனை யிங்கேஅழை யெனவே-சொன்னவுடன்
73 தாக்கிடும்பன் வந்துன்னைச் சண்முகவர் உத்தாரம்
வாக்குரைத்தார் நீயுமின்று வாஎனவே-பாக்கிய
74 சென்றே னவர்பால் சிகண்டிமலை யாதிபனை [மெனச்
கண்டேன் மனதுகளி கூர்ந்தேன் —கொண்டாடித்
75 தோத்திரங்கள் செய்தேன் சுகந்தங்கள் வீசுதிருக்
காத்திரத்தைக் கண்டேன் கருணையுடன்-போற்றரிய
76 செந்தாமரைத்தடமும் திவ்யகரம் பன்னிரண்டும்
சந்திரோ தயம் போலச் சண்முக மும்-விந்தைபெறும்
77 சேவற் கொடியும் சிறந்தமயில் வாகனமும
மூவர்மனம் மெச்சும் முனைவேலும் -தேவர்மட
78 மாது வள்ளியம்மை மகிழ வினிதிருக்கும்
கோதறுதேன் வாயான் குமரனையென்-தீதறவே
79 கண்டேன் மனத்தில் கவலை வறுமையெல்லாம்
விண்டேன் எனதுடலம் விம்மினேன்-அண்டர்பணி
80 கந்தா கடம்பா கதிர்வேலா கங்கைபெற்ற
மைந்தா மயூரகிரி வாசா-நந்தாக்
81 கருணைக் கடலே கனிந்துருகிப் பாடும்
அருணகிரி நாதருக்கு அருள்வோய்-திருவிருக்கும்
82 பூங்கொடியாள் வள்ளி புனத்துக்கு ஒருகிழலாய்
வேங்கை மரமாகி நின்ற வேலோனே-பூங்கமலத் (து)
83 அண்ணலைவன் சிறைக்குள் ஆக்கிவைத்தாய் சூரை [வென்று
விண்ணவர்க்கு மிக்கசிறை மீட்டுவந்தாய் [அண்ணலுக்கு
84 நன்னயமாகச் செவியில் நற்பிரண வப்பொருளைச்
சொன்னவனே சூழும் சுடரொளியே-என்னையின்று
85 காப்பாற்ற வேண்டுமென்றேன் கந்தர் திருவாய் [மலர்ந்து
வாய்ப்பாய் உரைத்ததமிழ் வாணனே-தாப்பாய்உன்
86 ஊரையுமுன் தந்தை உயர்பேரை யும்உந்தன்
பேரையும்சொல் என்றார் பிரியமுடன்-சீர்பெறவே
87 விற்பனஞ்சேர் ஊனைநகர் வீரபண்டாரத்தின் மகன்
சுப்பிரமணிய னென்று சென்னேன்நான்-அப்போதில்

88 இந்நகர்க்கு உள்ளூர் ஈரைங்கா தங்கடந்து
வந்ததென்ன என்று வழுத்தினர்-சந்ததமும்
89 போகா வறுமை புலிபோல என்னுயிரும்
பாராருந்தன்மை பசுப்போல்-வேகமுறும்
90 துன்பக் கருடனுடன் தோயாவன் என்னுயிரும்
இன்பம் அணுவத்தினையும் இல்லாமல்-முன்புகண்ட
91 நச்சரவைப் பார்த்து நடனமிடுந் தோகைமயில்
பச்சோந்திக் கஞ்சும் பழமையைப்போல்-மெச்சு
[செல்வம்
92 இல்லா வறுமையினால் இல்லாள்முன் வாய்பேசச்
செல்லாமல் நெஞ்சம் தியங்கியே–நல்லோர்கள்
93 கூடுசபைக் கேகமனம் கூடாமலே விரைந்தே
ஓடி ஒளித்தேன் உறுகனல்-வாடுவதால்
94 நாடுதோறுஞ் சென்று நடந்தலுத்துப் பேர்கேட்டு
மூடர்களைப் பொல்லாத மூக்கர்களை-பாடுதமிழ்க்கு
95 ஈயாரைச் சார்ந்தோர்க்கு இடுக்கண் செய்வாரை
தீயாரை மாறாச் சினத்தோரைப்-பேயான [மிகத்
96 சண்டாளரைப் புரட்டுச் சல்லியரை ஏழைமுகம்
கண்டிரண்டா லுத்தக் கயவர்களைக்-கொண்டாடிக்
97 காமனென்றும் சோமனென்றும் காண்டியனென்றும்
[பலத்தில்
வீமனென் றும்மிக்க விதுரனென்றும்-பூமிபுகழ்
98 தென்னன் என்றும் மிக்கதிருமால் என்றும்
[கொடைக்குக்
கன்னன்என்றுஞ் செல்வக் கனகன்என்றும்-
நன்னயம்சேர்
99 மேருஎன்றும் கொண்டல்என்றும் வேண்டிய
தெல்லாங்கொடுக்கும்
தாருஎன்றும் பாடிச் சலித்துச்-சீர்உயர்ந்த
100 மஞ்சரியும் ஓர்பணமாய் வண்ணம் முக்காற்பணமாய்
அஞ்சு பதம்பாடி அரைப்பணமாய்-மிஞ்சிய கூத்(து)
101 ஆட்டுக்கிசை நாடகத்துறைக் கோர் பழைய
வேட்டையாய்ப்பத்து விருத்த முடன்-சீட்டுக்
102 கவிக்கோ ஓர்நாள்வயிற்றுக் கஞ்சியாய் வெண்பா
செவிக்கினிய முத்தமிழும் சேரப்-புவிக்குள் ஒரு
103 பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாவிகளைச் சொற்
சாக்குக்கும் பாடிச் சலிப்பாகி-நாக்குலர்ந்து [புகலச்
104 ஏடும் புண்ணாகி எழுத்தாணியுந் தேய்ந்து

பாடும் மனமும் பரதவித்தே - ஏடெழுதிச்
105 சுண்டுவிரலுங் காய்த்துத் தொண்டைகம்மல் [பாடியதால்
கண்டதல்லால் ஓர்பயனும் கண்டிலேன் - வண்டாவர்
106 செப்புமுலை வேசியர்க்கும் தீக்கும் திருடருக்கும்
தப்புமுன்னே கட்டித்தலைகிழாய் - மெய்ப்பூஞ்சல்
107 ஆட்டுவார்க்கும் சவுக்கோடு ஐந்து மணிக்கயிற்றில்
மூட்டுவார்க்கும் கொடுப்பர் மூடரவர் - பாட்டி [னர்க்குச்
108 செய்யார் இனி இவர்பாற் செல்வதனில் சாரமிலை
ஐயா எனை நீ நன்கு ஆதரித்துத் - தொய்யாமல்
109 காவென்றேன் அப்பொழுது கந்தர்திருவாய் மலர்ந்து
வாவென் றென்னோடு வசனிப்பார் - மேவியநீ
110 என்பால் உன்பாட்டை இயம்பினாய் வண்புலவா
உன்பால் என்பாட்டை உரைக்கக்கேள் - நம்பாஎன்
111 தந்தையுமோர் பெண்ணைச் சடையில்வைத்தார் [அச்சடையில்
அந்தமிலா ஊமத்தை யணிந்தார் - முந்த
112 இடு காட்டெலும்பை எடுத்தணிந்தார் அன்றிக்
கடுவாய் அரவுகழுத்திட்டார் - திடமொடுறும்
113 தொண்டர் தமையுண்டார் சூழ்ந்தகடல் நஞ்சை [யுண்டார்
கண்டிருந்தும் பிள்ளைக்கறியுண்டார் - கொண் [டாடிச்
114 சீர்வேடன் எச்சிலுண்டார் தின்றதெல்லாம் பற்றுமல்
ஈரேழுலகம் இரந் துண்டார் - பாரறியப்
115 பிட்டுக்கு மண்சுமந்தார் பின்னே விறகுவிற்றார்
மட்டுக்கடங்கா வளையல் விற்றார் - திட்டமுடன்
116 வில்லடியும் பட்டார் விஜயன்கையால் ஒருவன்
கல்லடியும் பட்டுடம்பு கன்னினார் - நன்மதுரை
117 மாறன் பிரம்படியும் வாங்கினார் பால்தனக்காய்
விறிடையன் கையரிவாள் வெட்டுண்டார் - கூறரிய
118 சூலாயுதம் படைத்தார் தொல்வேடன்றன் செருப்புக்
காலால் உதைக்கக் களித்திருந்தார் - சீலமுடன்
119 மாடெடுக்கப் பெற்றார் மருக்கொண்டார் தில்லைதனில்
ஆடெடுத் தாரென்று பெயராயினர் - நாடாண்மை
120 உம்பர்தொழுங் குற்றாலத் தோங்கல் தனிலிருக்கும்
கும்பமுனி கையாற் குறுகினார் - செம்பதும

121 வேதன் சிரசிலொன்றை வெட்டினார் மன்மதனை
பாதாதிகேச மெல்லாம் பார்த்தெரித்தார் -சூதாய்த் [தேர்
122 வண்டிக் காலிற்சோழன் மைந்தனையும் போட் [டரைத்தார்
சண்டனெனும் எமன்தனை வதைத்தார் - சென் [றெதிராய்
123 முப்புரத்தை வென்றகதை மூவுலகி லுள்ளவர்கள்
செப்புகின்றார் கேட்டாற் சிரிப்பாமே - இப்படியென்
124 தந்தை பிரபலங்கள் தாயார் வளப்பமதை
உந்தனுக்குச் சற்றே உரைக்கக்கேள் - பிந்தாமல்
125 அம்பலத்தில் ஆடினாள் அம்புவிக்கும் தாயானாள்
கம்பநதியில் தபசு கைக்கொண்டாள் - கும்ப
126 முலைகளும் மூன்றானாள் முனைப்புலித்தோல் [போர்த்தாள்
மலையரசனுக்கு மகள் ஆனாள் - பலவலைஞர்
127 சாதியிற்சேர்ந்தாள் சத்தி தானென்றாள் அம்மலைமேல்
நீதறவே வீற்றிருக்கும் தேவியந்தம் - ஓதும்
128 உருமாறியே குறத்திக் கொப்பாகச் சென்று
கருமாறியே கைக் கொடுத்தாள் - பரிவாகச்
129 செல்லாயி ரங்கோடி சீவர்க் கிருநாழி
நெல்லாற் படியளந்த் நீலியென்பர் - சொல்லுவதென்
130 தந்தைபட்ட பாடனைத்தும் தாயார்க்குண்டே புலவா
என்தமையன் செய்தி இயம்பக்கேள் - முன் அன்னை
131 தந்தைக்கு முன்பிறந்தார் தந்திமுக பாயினார்
விந்தைப் பெருச்சாளி மேற்கொண்டார் - முந்த
132 வாதக்கால் ஆனார் வயிறு பெரிதானார்
பாதைகுளம் வீதிபலவிடங்கள் - மீதிருந்தே
133 அன்னையைப்போல் பெண்தேடி ஆயாசமாய் மனதில்
உன்னி மரத்தூரில் உட்கார்ந்தார் பிள்ளையென்றன்
134 மாமன் வரலாற்றை வழுத்தக்கேள் உந்திதனில்
பூமனையும் பெற்றார் புவிபுரக்க - நேமி
135 பதித்தார் துளசி தனையணிந்தார் பாம்பை
மிதித்தார் பாலாழிமேல் மெள்ளக் - குதித்தோர்
136 ஆலிலையின்மேல் துயின்றார் ஆவையுமே ஓட்டிவரும்
கோலிலையும் பள்ளிகொண்டார் கூசாமல் - சால
137 மனையாளை நெஞ்சில் வைத்தார்பா போகினியாய்
எனையீன் றவரோடி ணங்கிக் - கனமாய்

138 அரியா புத்ரனென்றே ஆண்பிள்ளை பெற்றார்
தெரியாத பேர்களுண்டோ செப்பும் – பெரியதொரு
139 ஆடகனைக் கொன்றங் கவன்குடலை மாலையிட்டுக்
கூடிருக்க ரத்தங் குடித்துவிட்டார் – கோடியெனும்
140 ஆய்ச்சிமுலைப் பாலுண்டார் ஆவல் அடங்காமல்
பேய்ச்சி முலைப்பாலும் பிடித்துண்டார் – ஆய்ச்சி
[யர்கள்
141 பாடிதனி லுள்ளோர் பாற்பொங்கல் இட்டதெல்லாம்
கூடியுண்டார் பால்தயிரும் கொள்ளையுண்டார் –
[நாடறிய
142 மண்ணையுண்டார் பாடி மடவார் அறியாமல்
கண்மருட்டி ஆடைதனைக் களவாடி – வண்மைக்
143 குருந்தேறிக் கொண்டார் குதிரை கிடையாமல்
பருந்தேறிக் கொண்டார் பகட்டாய் – வருந்தாமல்
144 காய்ச்சியபால் தன்னைக் களவாடித் தம்முடைய
ஆய்ச்சிகையால் கட்டுண்டு அடியுண்டார் –
[கூச்சமின்றி
145 ஆடவராய் மிக்க பதினாறாயிர மாதர்க்
கூடியே மிக்க களிகூர்ந்திட்டார் – மோடிசெய்து
146 மாமனையுங் கொன்றுவிட்டார் வஞ்சகமாய்
[அண்ணனையும்
பூமிப் பிரதக்ஷிணமாய்ப் போகவிட்டார் – நேமியினால்
147 பானு தனைமறைத்தார் பார்த்தனுக்குத்தே
[ரோட்டிக்
கானிலுறை ஐவரையும் காத்திருந்தார் – மேன்மை
[யுடன்
148 சொல்லவொண்ணா வஞ்சத் துரியோதனாதிகளை
கொல்ல வகைவிபரம் கூறினார் – சொல்லுவதென்
149 பாரினிலே புரட்டுப்பண்ணிய நிட்டூர மெல்லாம்
ஆருமறி வார்களது வல்லாமல்–சீர்கிழவிக்
150 கூனும்நிமிரக்குறி செய்தார் மாரீச
மானையெய்தார் தென்னிலங்கை வாழரக்கன்–
ஜானகியைக்
151 கொண்டேக மிக்க சிறைக்கோலமுற்ற பெண்ணை
[நத்திச்
சென்றழைத்துக் கொண்டவசை தீராதே–
[வண்டரன்று
152 நாட்டிவருக் கொட்டாமல் நற்சிறுதா யார் வனத்தில்

ஓட்டிவிட்டார் கண்முன் றுலகறியப்-பூட்டகமாய்
153 வஞ்சகப்போராய் மறைந்து வாலியைக் கொன்ருர்
[காட்டில்
தஞ்சமற்ற பெண்பிள்ளையைச் சங்கரித்தார்-
ரஞ்சிதமாய்க்
154 கல்லைப் பெண்ணுக்கிவிட்டார் காலாந்திரன் செய்தி
சொல்லத் தெரியாதோ சொற்புலவர்-நல்லதினி
155 எந்தன் இயற்செய்தி இயம்பக்கேள் யாவருக்கும்
கந்தரென்று பேரா னேன் கள்வரைப்போல்-
[முந்தமுந்தக்
156 கோழி பிடித்தேன் குறத்திதனை மாலையிட்டேன்
பேழை வயிற்றவனுக்குப் பின்னுனேன்-நீள்கூந்தல்
157 வேடிச்சிக் காய்வனத்தில் வேங்கை மரமாகிமயல்
வாடிக்கை மாதருக்கு மாலானேன்-நாடறியத்
158 தந்தைக் குபதேசம் சாற்றினேன் அப்பனுக்கு
விந்தைக் குருக்களென்ருர் மேதினியோர்-தந்தை
[வெகுண் (டு)
159 ஆனாலும் பிள்ளை அதிகப் பிரசங்கியென்று
மீனுக்கியே கடலில் விட்டுவிட்டார்-நானிலத்தில்
160 தேர்பிறவி யானேன் சிவிகைதனி லேறுவர்முன்
கூர்மயிலின் மீதேறிக் கொண்டிருந்தேன்-சாரமாய்
161 வெண்ணீ றணிந்தேன் மிகுகடப்பந்தா ரணிந்தேன்
கண்ணீராருனேன் கருணைருடன்-பண்ணுகவிக் (கு)
162 ஆம்புலவா கேட்டிலையோ ஆண்டிதனை யடித்தால்
சாம்பர் பறக்குமென்பார் தாரணியில்-யாம்பழத்
[துக்(கு)
163 ஆகவே நான்கயிலை யம்பதியைச் சுற்றுமுன்னே
தாகத்தால் என்தமையன் தந்தைதனை-வேகமாய்ச்
164 சுற்றியடி பணிந்து சூதக்க னியதனைப்
பற்றிக்கொண்டார் நான் பதறியே-முற்றி
165 வருகோ பத்தாலே மாதாபிதாவை விட்டு
திருவாவினன் குடியிற் சென்றேன்-பரிவாக
166 அன்னைவந்தாள்என்னை அழைத்தாள் ஒருதரமே
என்னபிள்ளாய் செய்தகுறை யென்ன-முன்னம்
167 சகிப்பா ரிலையா தமையன் புசித்தால்
பகைப்பாரோ மாம்பழமோ பாரம்-தெகிட்டாப்
168 பழம் நீ எனவே பகர்ந்தாள் அதனுல்
பழநியென்னும் பேரானேன் பண்பாய்-விழுவார்

169 மலைவாய் அலைவாயில் வாழ்க்கையுற்றேன் பின்னும்
சொலல் வேண்டுமென்றால் தொலையா-நிலையிருப்பு
170 வேலொழிய என்கையில் வேறுபொருள் உண்டானால்
சாலவுரைப் பாய்நான் தருகின்றேன்–ஞாலமிசை
171 பங்கமில நாங்கள்பட்ட பாடெல்லாம் உன்னிடத்தில்
சங்கதியாய்ச் சொன்னேன் தமிழ்ப் புலவா–
[எங்கள் பிழைப் (பு)
172 இப்படியெல் லாமிருக்க என்பாலில் உன் துயரம்
எப்படிச் சொல்வாயென் றியம்பினார்--அப்போது
173 ஊரல் மத்தளத்திடைப் போய்உற்றதுயர் சொன்ன
அருமைக்கு இணையென்று அதிசயித்துக்-கருணையுடன்
174 தாமரைசூழ் வாவிதனில் போனவண்டு கஞ்ச
மாமதுவைத் தானுமுண் ணுமற்போமோ–நேமியினன்
175 மாலுக்கா கப்பயந்து வந்துதஞ்சம் என்று சொல்லச்
சிலைக்குருச் சேத்திரன் அதற்காய்–ஞாலமிசை
176 தாராரும் நீள் விஜயன் தாமோதரனுடனே
போராடிக் காத்ததுவும் பொய்யலவே – சீர்முனியைக்
177 காக்கும் வகைக்கரனார் காலன்றனை யுதைத்து
மார்க்கண்ட னைக்காத்த வாறுபோல் – தீர்க்கமுடன்
178 என்னை யடர்கலிகள் எல்லாந்தீர்த் தப்பவிசு
தன்னைக் கொடுப்பாய் தயாபரா – அன்னைதெய்வம்
179 நீயே எனக்கல்லால் நீடுகதி யில்லைஎன்றேன்
மாயோன் மருகன் மனமகிழ்ந்து – நேயமுடன்
180 தன்மை யதாமோ தனக்குவந்த காரியத்தில்
பின்னுக்கு வாங்குவரோ பேருலகில் - நன்னயமாய்
181 மிக்கசன மாய்த்தனது வீட்டில் விருந்துவந்தால்
பக்கத்தில் தள்ளுவதும் பண்பலவே - அக்கதைபோல்
182 நம்மால் தழைத்தகவி நாவலா உன்னைநான்
சும்மா விடாமல் ஒன்று சொல்லக் கேள் -நம்மடியார்
183 பார்த்திபர் காவிரிப்பூம் பட்டினத்தில் முன்வைசியர்
கோத்திரத்தில் மிக்க குபேரனைப்போல் - வீற்
[றிருக்கும்
184 அந்நாளில் பாண்டிநகர்க்கு ஆன்குடி வேண்டு
[மென்று
தென்னுடன் தேசிகர்பால் சென்றுரைத்து - முன்னை
185 மெத்த உபசாரம் வேண்டுவதெல் லாம்உரைத்துச்
சித்தம் திரும்புதற்குச் செய்திசொல்லிச் - சத்திய
[மாய்த்

186 திங்கள்கதிர் உள்ளமட்டும் தேசிகரே என்னாட்டில்
உங்கள்மரபுக் கொருகாலும் - பங்கம்
187 வரஒட்டேன் என்று வலதுகை யைக்கொடுத்து
இரவுயொளி ரதத்தில் எற்றிப் - பரிவாய்
188 வளமையுட னழைக்க வந்தே நலமாய்
இளசைமா தைப்பதி யிருந்தார் - களிகூர்ந்தே
189 அஞ்செழுத்தை உட்செபிப்போர் அல்லும் பகலு
[மெனை
நெஞ்சில்விட்டு நீங்காத நிண்ணயத்தார் - ரஞ்சித
[மாய்த்
190 திருமாலுக் கடிமை செய்வோர் தெய்வமெலா
[மொன்றென்று
உரிமையுடன் போற்றிவளர் வுற்றோர்—இருநிதியம்
191 வேண்டினாருக் குதவிமிக்க கனத்தைப் பெற்றோர்
பாண்டி நாட் டாசான்பதம் பணிவோன் - நீண்ட
[புகழ்
192 தேசாதிபர் புகழும் செய்யத்திருப் புனவை
ஆசான் அழகர் அடிபணிவோர் - நேசமுடன்
193 அன்னை தந்தை தெய்வமுதல் ஆசானைப் போற்று
[தலாய்
மன்னவரைக் கூட வணங்காதார் - முன்னுயர்ந்த
194 மேருகிரி யுரைத்தும் வேழம்தனை நிறுத்தும்
பேருலகில் மிக்கான பேரானார் - யாரும்
195 அதிசயிக்கக் காவேரி ஆறுதனைப் பஞ்சுப்
பொதியால் அடைத்துப் புகழானார் - மதியால்
196 கடலில் எறிந்தபொன்னை காசினியோர் தாமெச்
சிட அழைத்த ஏலேல சிங்கன் - நெடுங்கிணற்றில்
197 வீம்புக்குத் தம்வீட்டில் வெள்ளாட்டி பாற்சவடி
தாம்பிட்டு நீர்இறைத்த தாட்டியர்கள் - தேம்பவே
198 கல்யாண வாயிலிலே காவணக்கா லுக்குயர்ந்த
நல்பவளக் காலதன் நாட்டினோர் - வல்லிரவில்
199 மற்கதவு வெள்ளிதனை வாங்கிட அக்கணமே
பொற்கதவு நாட்டிப் புகழ் படைத்தோர்
200 சிரகப்பூந் தாரணிந்தோர் சிங்கக்கொடி படைத்தோர்
காரணியாய்ச் செம்பொன் கவிக்கீவோர்-பார்புகழும்
201 கர்த்தன் இளசைக் கைலாஸ நாதரையும்
நித்தியகல் யாணியையும் நெஞ்சில்வைப்போர்
[- நந்தினரை

202 ஆட்கொண்ட நாதருடன் ஆம்சிவ புரந்தேவி
தாட்கமலம் போற்றி வளர்தாட்டியர்கள்
[-வேட்காம்
203 வடிவாரும் பேட்டை வளரொளியோர் மிக்க
வடிவுடையா ளைப்பணியு மாண்பார் - படிபுகழும்
204 தெள்ளுத்தமிழ் சேர்திரு வேளூர்க் கற்பகமாம்
பிள்ளையா ரைப்பணியும் பேராளர் - அள்ளிநிதி
205 செய்யும் நியமச் செயங்கொண்ட சோழீசர்
தையல் சவுந்தரியைத் தான்பணிவோர் - வையமகிழ்
206 பூவுடைய ஊரில் புகழ்தேசிகர் அடியோர்
ஆவுடைய மாதின் அடிபணிவோர் - தேவர்புகழ்
207 வேலை நகரில் மிகுந்தகண் டீசரொடு
சாலவும் காமாக்ஷி இருதாள்பணிவோர் - மேலி
[லுப்பைத்
208 தான்தோன்றி ஈசரையும் சங்கரியையும் போற்றும்
மான்மதஞ் சேருந்துளப மார்மார்பன் - தேன்
[சிறந்த
209 மாதைப் பதியில்வளர் வளரும்ஐநூற் றீசர்மகிழ்
காதல் பெரியவளைக் கைதொழுவோர் - சாதகமாய்
210 ராஜசிங்கம் வாழ்பூமி நாதர்சிவ காமியையும்
நேசமுடன் போற்றிநிறைந் திருப்போர் - வாசனையாய்
211 நானிலத்தோர் கொண்டாட நம்மிடத்தில் மிக்க
[அன்ன
தானமடம் கட்டிவைத்த தாளாளர் - மேன்மைத்
212 திருவாவினன் குடியிற் சென்றெதிர்ந்த பேர்க்குத்
தருவாய்க் கொடுக்கும் அன்னதானர் - இருநிதியம்
213 நாடறியப் பூவுலகில் நான் முந்திரிதேடிக்
கோடி யளிக்குங் கொடையாளர் - தேடிநிதி
214 மாஹேஸ்வரர் பூஜை மாறு தரிபூஜை
சேயார் மும்மூர்த்திப் பிரதிஷ்டை - மாயாத
215 ஊரணிகள் கூபமிவை உண்டுபண்ணி மிக்கதர்மம்
தாரணியில் செய்திட்ட சற்புருஷர் - வாரம்
216 சிகரத்தில் ஏற்றிவைத்த தீபம்போல் ஏழு
நகரத்தார் எல்லாம் நமதடியார் - மிகஅவர்கள்
217 வீரர் உனைக்காக்க வேண்டித் திருமுகமும்
தாரேன் அவரிடத்தில் தான்சென்று - பூரணமாய்க்
218 கனகவணி கேசர்இரு கையில் திருமுகத்தை
மனமகிழ ஈவாய் வணிகேசர் - அனைவர்களும்

219 குன்றுக் குடியில் குமரர் திருமுகத்தைக்
கண்டவுடனே களிகூர்ந்து - கொண்டாடி
220 உன்னையடர் கலிகள் ஓடக் கனகநிதி
தன்னைக் கொடுத்தாதரிப்பார்கள் - இந்நேரம்
221 செல்லுவா யென்று திருமுகந்தந்தே யுனது
அல்லல் அறஇங்கு அனுப்பினர் - நல்லதென்றே
222 இங்கிதமாய் மெய்கூர்ந்து இனிதாய் நடந்துகொத்த
மங்கலத்திற் சென்றேன் வணிகேசர் - சங்கதியாய்க்
223 கூடி உலகாயி கோயிலுக்குநேர் வடக்காய்
நாடி விடுதிக்குள் நன்னயமாய் - நீடிவளர்
224 மாவுக்கு மேற்காய் வணிகேசர் எல்லோரும்
காவணத்துக் குள்ளிருந்தார் கண்டேன் நான்
225 இந்திரரைப் போலிருந்த ஏழுநகராதி பர்க்குக்
கந்தர் திருமுகங்கை யிற்கொடுத்தேன் - அந்தமுடன்
226 வித்தாரக் கைவாங்கி வேலர் திருமுகத்தை
வைத்தார் சிரசில் வணிகேசர் - உற்றுநான்
227 குன்றுக் குடியில் குமரர்பால் என்துயரை
விண்டதுவும் என்னிடத்தில் வேலவரும் - பண்பாய்ச்
228 சலிப்பை யுரைத்ததுவுஞ் சாகரந்தான் சுட்டால்
கலக்கச் சலமுண்டோ கந்தா - நலத்துடனே
229 என்கவலை தீரவகை என்னவென்று கேட்டதுவும்
வன்மைக் குபேர வணிகருக்காய் - அன்பாம்
230 திருமுகத்தைத் தந்ததுவும் செப்பினேன் அப்போ
மருவி நிதிமிக்க வணிகேசர் ஒருமையுடன்
231 வந்த திருமுகத்தை வாசித்தார் அப்போது
சிந்தை மகிழ்ந்தே அஞ்சல்செப்பினர் - கந்தமலர்
232 வேணநிதி யீந்தார் மிக்கவஸ்திரங் கொடுத்தார்
பூணும் எனத்தங்க நகைபூட்டினர் - ஊணுறவாய்
233 உண்டிருக்க நெற்கொடுத்தார் ஊரும் பலவாக
கண்டிருக்க மெத்தக் கனம்செய்தார் - கொண்டாடித்
234 திட்டமுடனே வணிகர் செய்யுங்கல் யாணமதில்
கட்டளையாய் ஓர்பணமும் கண்டெழுதிச் சட்ட
[முடன்
235 சாதனமுந் தந்தார் சஞ்சலமெல் லாந்தீர்த்தார்
மாதனவா னாகவென்னை வாழ்வித்தார் - ஆதலினல்
236 துங்கமலை யான்வாழி! தூய தமிழோர்வாழி!
எங்கும் படியாள் இறைவாழி! மங்களமாய்

237 வாழு குமரேசர் மகராஜர் தென்னிளசை
ஏழு நகரார் வாழியே!

சுபம்! சுபம்!! சுபம்!!!

திருமுகவிலாசம் முற்றிற்று.

உ சிவமயம்.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள்
இயற்றிய

நகர வாழ்த்து.

கடவுள் வணக்கம்.

அறந்தழைக்கும் ஏழுநகர் ஐந்நூற் றுயர்வணிகர்
சிறந்திருக்கும் வாழ்த்திதனைச் செப்பவே - நிறைந்த [புகழ்
அஞ்சரமே! குஞ்சரமே! ஆறுமுகமே சிறந்த
கஞ்சமலர் மகளே! காப்பு.

நூல்.

1 சீரான ஏழுநகர்ச் செல்வர் புகழ்பாடக்
காரானை மேனியனே! கந்தனுக்கு மூத்தோனே!
2 தப்பாத வாசகனே! தண்டமிழ்க்கு வல்லோனே!
எப்போதும் போற்றிசெய்வேன்; எந்தன்வினை [தீர்த்தருள்வாய்
3 சீரகத்தார் மார்பர் சிங்கக் கொடியார்மால்
மார்பிருக்கும் லக்ஷ்மியை வைத்த குலத்தவர்கள்
4 சீராக வாழும் திருப்புனவை மாமுனியை
ஆராய்ந்து போற்றும் அரிய குலத்தவர்கள்
5 பாண்டிநாட் டாசான்தன் பாதம் பணிந்திடுவோர்
நீண்ட புகழ் சேரநிரை பவளக்கால் நிறைப்போர்
6 போற்றுவார் ஐந்தெழுத்தைப் போதமளித் தவை [போல்
மாற்றுவார் தீவினையை; வைத்திடுவார் நல்வினையை
7 தேசம் மதித்திடவே செந்தமிழைத் தான்வளர்ப்போர்
வாசமுடன் வெள்ளானை வாசல்நடை கொண்ட [வர்கள்

8 மூவேந்தர் தங்களுக்கு மூடிபுனைய வல்லவர்கள்
தார்வேந்தன் சோழன் சரிதைதனை விண்டவர்கள்
9 பார்வேந்தர் மெச்சப் பவளக்கால் தான்நிறைப்போர்
மாவேந்தர் கொண்டாட மாணிக்கப் பிச்சையிட்டோர்
10 சீராளன் தன்னைச் சிறக்கக் கறிசமைத்த
நீரேந்து செஞ்சடையான் நீண்டபதம் பெறுவோர்
11 காசியிலும் சேதுவிலும் கனகத் தருமமிட்டு
வாசமுள்ள ஈசர்பதம் மனம்பதித்து வாழும்அந்நாள்
12 நாற்றிசையும் பாண்டியனார் நற்குடிகள் தான்தேடித்
தேற்றமுள்ள தேரேறித் தேசிகர்தம் நாடணுகி
13 செந்தாமரைபோல் சிறந்தமுகம் பார்த்தயர்ந்து
பிந்தாத செந்தமிழைப் பேணுமவர் பெற்றிகண்டு
14 வாரீர்! வணிகரே! வளமையுள்ளோர் உங்களைப்போல்
பாரேழ் புவியிலுமே பார்த்துவந்தோம், கண்டிலமே!
15 நம்முடைய தேசமதில் நற்குடியாய் வாழ்ந்திருக்க
வண்மையுள் ளோர்நீங்கள் வரவேணும் என்றுரைத்
[தார்

16 அப்போது நல்வணிகர் அரசருடன் எதுரைப்பார்
இப்போதே சொல்லுகிறோம் இவ்வுலகில் உள்ளபடி
17 எப்போதும் போலஎவ் விக்கினமும் வாராமல்
தப்பாது காப்போம்எனத் தாரும்வலக் கைஎன்றார்.
18 மெய்ப்பாகவே அரசன் வேண்டும் பிரியமுடன்
எய்ப்பகற்ற வந்திடுவீர் எமக்குமுடி சூட்டிடுவீர்.
19 சந்திரரும் சூரியரும் தமிழ்மொழி உள்ளளவும்
எந்தன் அரசுள்ளளவும் இங்கிருந்தே வாழும்என்றார்
20 வைத்திருப்போம் என்று வலக்கை கொடுத்தாராம்
சித்த மகிழ்ந்தார்வணிகர் தென்னவனார் வாழ்க
[என்றார்

21 என்றவுடன் பாண்டியனார் இதயக் களிப்புடனே
அன்று விஸ்வ கர்மாவை அழைத்தேது தாமுரைப்பார்
22 ஆயிரத்தைந் நூறுதேர் அழகாக வேணுமென்றார்
சாயலுடைக் கன்மாவும் தமிழரான் ஆணைவழி
23 பாயிரத்து நூல்வழியே பண்பாகத் தான்சேர்த்து
ஆயிரத்தைந் நூறுதேர் ஆண்டவர்முன் னேவிடுத்தார்
24 கண்டவுடன் பாண்டியனார் கன்மாவைக் கொண்
[டாடித்

தண்டமிழ்சே ருப்வணிகர் தம்மைவர வழைத்து
25 தேரேறி நம்நாடு செல்வோம் என உரைத்தார்

சீரகத்தார் மார்பர் சிறந்துதே ரேறிநின்றார்
26 அப்போது பாண்டியனார் அன்பாகத் தேர்நடத்தி
மெய்ப்பாகத் தாமும் மேல்நகரை விட்டார்கள்
27 கொந்தரும் காவேரி கொள்ளிடமும் தான்கலந்து
வந்தே இடைமருதூர் வழங்குமடம் வைத்தார்கள்
28 செந்தா மரையாள் சிறந்த வெள்ளாற்றங்கரையில்
வந்தார்வணிகர் அங்கே வழிக்களைப்புத் தான்
[தீர்ந்தார்
29 தேசமது வெள்ளாற்றுத் தென்கரையில் நன்றாக
வாசமுள்ள ஓங்காரக் குடிதன்னில் வந்திறங்கி
30 ஆசு மதுரமுள்ள ஆயிரத்தைந் நூற்றுவர்கள்
நேசமுடன் வாழ்ந்திருக்க நீதிமுறைதான் வகுத்தார்
31 ஒப்புடனே நாமுமிந்த உயர்பாண்டி நாட்டகத்தே
எப்போதும் குற்றமின்றி இருப்போமெனவுரைத்
[தார்
32 ஒப்பினார் ஆயிரத்தைந் நூற்றுவரும் ஓர்மனதாய்ச்
செப்பமுடன் நாமிருக்கும் திட்டமிது என்றார்கள்
33 அரியூரார் சுந்தரத்தார் ஆன இளசை நகரார்
மருவியே மூவோரும் வாழ்வோமெனவுரைத்தார்
34 வாசமுடன் மூத்தோனை மருவி அரியூர்நகரில்
ஈசனையும் அர்ச்சனைகள் செய்திருக்க என உரைத்தார்
35 இந்திரனே போன்று இருவர்க்கும் நடுவாக
வந்தவனைச் சுந்தரத்தில் வாழுமெனவுரைத்து
36 வளமையுடைய தமிழ் வல்லவரைத் தானழைத்து
இளசை நகரத்தில் இருமென்று தாமுரைத்தார்
37 அன்றுவகை மூவருக்கும் ஐநூற்றுவர் எனவே
நன்றாம் பெயராக நலமாக வாழ்ந்தார்கள்
38 அன்றங் கிருந்த அரியூரார் ஆறுநகர்
நன்றியுடன் சுந்தரத்தார் நாலுநகரம் இருந்தார்
39 இளசை நகர்வேந்தர் எழுநகர மென,
வளமையுடன் இளசைவகை மாதைபுகழ்
பட்டணமும்
40 சூரைநகர் வேலைநகர் சொல்லரிய நல்நேமம்
பாரில் புகழ்படைத்த பண்பான ஏளகையும்
41 எங்கும் புகழ்பெறஇவ் வேழுநகர் உண்டாக்கி
சிங்கக் கொடித்தலைவர் செழித்தங் கிருந்தார்கள்
42 எங்கும் தமிழ்பெறவே இளசை நகர்தனிலே
கங்கை அணிந்த நல்ல கைலாச நாதருக்கு

43 கெர்ப்பக் கிரகம், அர்த்தக்கிரகம், கிளைகள் மகா
[மண்டபமும்
தெப்பக் குளமும் திருக்கோத் திருமதிலும்
44 அன்னசத்திர சாலைகளும் அளிசூழ்நந் தவனமும்
மன்னரசில் தானமிடும் மாளிகையும் கட்டி
[வைத்தோர்

45 கற்பகவி நாயகருக்கு கதித்ததிருப் பணியும்
இப்புவியோர் மெச்ச இரணியூர் ஈசருக்கு
46 செப்பமுள்ள மண்டபமும் திருப்பணியும்
[செய்தவர்கள்
ஒப்புக்கு உரைப்பதற்கு ஒரு நகரும் இல்லாத
47 மாத்தூர் தனில்மருவும் மாதைஜநூற் றீசருக்கு
ஏற்றமுள்ள கர்ப்பக்கிரகம் இலங்குமகா
[மண்டபமும்
48 திருக்குளமும் பூவனமும் சிறக்க அமைத்
[திட்டவர்கள்
மருக்கமலம் பூங்கமலம் வளர்பெரிய பட்டணத்தில்
49 தான்தோன்றி ஈசருக்குத் தாரணியோர் மெச்சிடவே
வான்பெரிய மண்டபமும் மாமதிலும் கட்டியவர்
50 நயம் பிறக்கும் சூரை நகரில் புகழுவேண்டி
வயங்குதமிழ் நல்வணிகர் வான்தலைவ னாம்பெயரால்
51 திகழ்கின்ற நல்லிறைவர் தேசிக நாயகர்க்கு
மகிழ்வான ஆலயமும் வாவியும் உண்டாக்கி
[வைத்தோர்

52 வேலன் குடியில் மிகுந்த கண்டீஸ்வரர்க்கு
ஆலயமும் நற்பணியும் அன்புடனே ஆக்கிவைத்தோர்
53 வயங்குபுகழ் நேமளனும் வளம்பெரிய
[பட்டணத்தில்
ஜெயங் கொண்டநாதருக்குத் திருப்பணிகள்
[செய்தவர்கள்

54 நற்புவியில் ஏளகையில் நல்லவள ரொளியார்க்கும்
வர்க்கத் திறமுடைய வைரவநா தர்தமக்கும்
55 மருப்பணிவி நாயகர்க்கும் மற்றுமுள்ள தேவருக்கும்
திருப்பணிகள் செய்து சிறந்தநல் வாழ்வுபெற்றார்
56 மீளவனார் மெச்ச வெகுதலங்கள் உண்டாக்குத்
தேனாறணையும் சிகண்டிமலை சீராக்கிப்
57 பாண்டி பதினான்குளன்னும் பதியில் மடம்
[வைத்தவர்கள்

வேண்டிய செல்வம் மிகுந்த புகழ்படைத்தோர்
58 காளை யொருவனுக்குக் கடிமணந்தான் செய்ய
[எண்ணி
வேளைமயக்கும் எழில்மேவிய பெண்ணைத் தேர்ந்து
59 நாள்முகூர்த் தம்பார்த்து நற்காப்புத் தான்கட்டி
நீள்புவியோர் மெச்சி நிறைந்தபணி யத்தனையும்
60 பழகுதமிழ் நல்வணிகர் பழக்கப்படி யணிந்து
அழகுக்கு அழகாக்கி அரசன்எனச் செய்தபின்பு
61 கொடையால் உயர்ந்த குபேரன் மகள் தனக்கு
அடையத் தவமிருந்த அணிகளையே பார்த்தெடுத்துப்
62 பூட்டுவன பூட்டிப் பொருந்துவதெல் லாம்முடித்து
தேட்டாளர் தங்கள்மனை சென்றங்கு இருந்தனராம்
63 பண்டிதருக்கு உள்ள பலவரிசை அத்தனையும்
கொண்டுசென்று வேவு கொடுத்தார் மருமகட்கு
64 மறையோர் சிறந்ததென வரையறுத்த நாள்குறித்து
முறையோர் உறவின்முறை மூன்றுநக ராதிபர்க்கும்
65 தென்னவனூர் தங்களுக்கும் சென்றங்குரைத்தனராம்
என்னுடைய நாடதனில் இதுபோக நாள்என்று
66 சொன்னவர்க்குப் பூவினமும் துயிலாடையுங்
[கொடுத்து
நன்னெறிசேர் பாண்டியனூர் நாற்றிசையும்
[மெச்சிடவே
67 செந்நெல் அரிசியொடு சிறந்தநல் பலாப்பழமும்
கன்னல் கதலிக்கனியும் காராவின் நெய்க்குடமும்
68 இளநீரும் பாற்குடமும் இஞ்சிமுதல் ஏலம்வரை
வளமார் தமிழ்நாட்டின் வான்பயிர்கள் அத்தனையும்
69 பட்டாவளி முதலாய்ப் பல்கூறை உள்ளதெல்லாம்
கட்டாது உலுப்பைகட்டிக் காணவந்தார்
[பாண்டியனூர்
70 அரியூரார் ஆறுநகர் ஆனகுல வேந்தர்களும்
சுருதிபெறு சுந்தரத்தார் சொல்பெரிய நால்வரும்
71 இளசைநகர் முதலாய் ஏழுநகர் வேந்தர்களும்
அளவுமிகு சோபனத்தில் ஆயிரத்தைந் நூற்றுவரும்
72 வந்தார்கள் திசைகள் மகிழ்ந்து முகூர்த்தமதில்
செந்தாமரையாள் வாழ் சீரகத்தார் மார்பருக்கு
73 கல்யாண வாசல்தனில் கலைப்பவளக் கால்நாட்டி
வல்லார்புகழ் நல்ல வைரத்தால் விட்டமிட்டு
74 தங்கத் தகடதனால் தான்வேய்ந்தார் காவணத்தைப்

பொங்கமதாய் எங்கும் புகழ்மேற் கட்டிகட்டி
75 கதலியுடன் தீங்கன்னல் கமுகுதனை நிறைத்து
பதுமமலர் மாலிகையும் பாதிரிப்பூ நற்சரமும்
76 கோமேத கம்வைரம் கொத்துமுத்து மாலைகட்டி
மாமேவு வீதியெல்லாம் வாகாகவே நிறைத்து
77 மண்டபமும் வீதிகளும் வரிசையாய்த் தானமைத்து
தெண்டிகளிலே உயர்ந்த சித்திரங்கள் தானெழுதி
78 தெருவீதியெங்கும் சிறப்பாய் அலங்கரித்து
திருவளரும் காவணத்தில் செம்பொற் குடம்
[நிறைத்து
79 தூங்கா விளக்குத் துலங்கித் திசைதோறும்
பாங்கு பெறவேதான் பணித்து நிலம்அழுத்திச்
80 சாந்தால் தரைமெழுகிச் சந்தனத்தால் கோலமிட்டு
பூந்தாமரை மலர்போல் பூம்பட்டுப் பாய்விரித்து
81 மேகவர்ணப் பட்டுதனை மேடையதன் மேல்விரித்து
ஏக வெள்ளைப் பட்டுதனை இன்பமுடன் மேல்விரித்து
82 இளசைநகர் வேந்தனுக்கு இலங்குமுடி சூட்டி
வளமையுடன் வீதிவலம் வரவேணும் என்று
[சொல்லி
83 வாலவயதுமண வாளருக்குப் பொட்டு மிட்டுக்
கோல்வர்ணப் பட்டுடுத்திக் கோதில் தலைப்பாகை
[கட்டிக்
84 காதில் சவடி கடுக்கன் நிறையப்பூட்டி
மாதுவளர் மார்பில் வரிசையுடன் பதக்கம்
85 சர்வாபரணங்கள் தன்னால் அலங்கரித்து
மருவிலா மேனிதனை மாலையினாலே நிறைத்து
86 வாகுடைய வால மணவாளப் பிள்ளைதனை
மாகனக மேனியனை மாமனார் தானெடுத்து
87 மெத்தையின் மேல்இருத்த மெல்லிநல்லார் தான்
[சூழச்
சித்தசனைப்போல் அவனும் சிறந்தங் கிருந்திடவே
88 ஆவின் நெய்வார்த்து அழகாய் விளக்கேற்றிக்
காவின் கனிவைத்துக் கதலித்தேங் காய்உடைத்து
89 விநாயகனார் பூஜை விதமாகத் தான்நடத்தி
நாயகக் காலான நடுப்பந்தற் கால்தனிலே
90 தர்ப்பை அரசந்தழையும் சீரான மாந்தளிரும்
கற்பக விருட்சகக் கால்கதிக்கவே தான்நாட்டி
91 இரத்தினங்கள் ஒன்பதையும் நேராகவே சேர்த்துச்

சுற்றி அரசாணிதன்னைச் சுகமாய் அலங்கரித்து
92 ஆசாரமாக நல்ல அணிவணிகர் சூழ்ந்திருக்க
ஆசாரி முன்னின்று ஹரிஓம்ஹரிஓம் என்று
93 செந்நெல் பயறு சீர்த்துவரை எள்ளுடனே
நன்னலமாய்ச் சேர்த்து நலமாய் முளைதெளித்து
94 வைரவ டூரியத்தால் வாகக வேசமைத்த
செயிர்தீர் முடியதனைச் செல்வனுக்கே தான்புனைந்து
95 அன்புசெறிவணிகர் அரிமணம் இட்டார்கள்
இன்பமுடன் வணிகர் எழுந்தருள வேணுமென்று
96 பேரிகை தம்பட்டம் பெரிதான டமாரம்
வீரியமான தவுல் வீறுன நாதசின்னம்
97 தாரை சின்னம் கொப்புரவடை மள்ளரிமுழங்க
பூரிகை மத்தளமும் புகழும் முரசொலியும்
98 எக்காளத்தின் ஒலியும் இராசகொடியும் முழக்கத்
திக்காளும் மன்னர் திடுக்கிட்டு இறங்கிடவே
99 ஊரில் வலம்வரவே உயர்வாய் அலங்கரித்த
சீரலங்கும் வெள்ளானை தேசிகர்முன் கொண்டு
[வந்தார்

100 தந்தைதாய் பாதமதில் தான்மலர் தூவிப்பணிந்து
சிந்தை தனில் ஈசர் சிவகாமியை வணங்கி
101 தங்கள்குல வணிகர் தாளிணையைத்தான் தொழுது
சிங்கக் கொடிபிடித்துத் தெருவில் பவனிவர
102 மாமன் எடுக்கி மதயானை மீதில்வைக்கக்
காமனைப்போல் ஆனைதனில் கர்த்தனைப்போ
[லேயிருந்து

103 பவளக்குடையும் நல்ல பட்டுக்குடை நெருங்கக்
குவளைக் கயல் விழியார் குஞ்சலங்கள் வீசிவரத்
104 தங்கள்குல வணிகர் தக்கோர் புடைசூழக்
கொங்கை யசைந்தாடுமின்னார் குங்குமச் சேராடிவர
105 ஆனை குதிரை அணியணியாய் முன்னடக்கச்
சேனைத்திரை நெருங்கச் சின்னஞ்சிறார் களிக்க
106 சிங்கக் கொடித்தலைவன் செல்லும் திருவீதி
கங்குல் ஒளிந்தோடக் கானல் விளங்கிவர
107 வாரணத்தில் ஏறி வருவார்க்கும் எட்டாத
தோரணங்கள் கட்டித்துலங்க அலங்கரித்த
108 மங்கையர்கள் காலில் வளர்ந்த சிலம்பொலியும்
சங்கீதத்தின் ஒலியும் தமிழ்சொல்லும் பேரொலியும்
109 ஆடிவரும் மாதொலியும் அரசொலியும் பின்னகப்

பாடகக்கால் வீரன் பவனிவரும் பீடுகண்டு
110 மாரனெய்ய மேவும் மலர்வாளி ஊடுருவ
ஆரம்பணி மடவார் அங்கவனைத் தானழைப்பார்
111 இடையிற் கலைதுவள இந்துமுகம் வேர்வொழுக
நடத்துடனடி நவமணிகள் தான் நிறைப்பார்
112 நாரணன்காண் என்றுரைப்பார் நாரணனே யாமாகில்
சீரணங்கு சங்கு திகிரிகையில் இல்லையென்பார்
113 வள்ளி மணவாளரென்பார் வள்ளி மணவாள
[ரென்றால்
தெள்ளியவேல் சேவற்கொடி கையில் இல்லையென்பார்
114 ரதிபுருஷன் காணுமென்பார் ரதிபுருஷன் ஆமாகில்
கதிமைபெறு காலமென்று கருங்குயில் கூவுமென்பார்
115 உள்ளாசைகொண்டு மன்னர்க் கொன்று குறை
[யுரைத்து
வெள்ளானை கண்டவுடன் விண்ணவர்கோன்
[என்றுரைத்து
116 நின்றுதிகைத்து நினைக்கும் அளவில் திருந்தி
நன்றியுடன் புனவை நன்முனிவன் சீடன்என்பார்
117 பாண்டி நாட்டாசான் பதந்தொழுநற் சீலனென்றும்
தீண்டாத கற்புடைய தேசிகுலநீபன் என்றும்
118 சந்திரகுலம் எருத தருமன் இவனுகுமென்றும்
குந்திமகன் கர்ணனைப்போல் கொடுக்கும் தியாகி
[என்றும்
119 தொண்டித் துறைக்கும் சூலவண்டிக் காரன்என்றும்
மண்டலமெல்லாமுலவு வணிகர்குல மன்னன்
[என்றும்
120 விருதுசின்னம் காளம் விதமாய் முழங்கிடவே
மருளகன்ற நெஞ்சினராய் மனத்தில் அவனை நிறுத்தி
121 சிரகத்தார் மேனியின்மேல் செண்டுவிழ எறிவார்
மாரப்பயல் ஏவும் வாளியே தைக்குதுஎன்பார்
122 எங்கள் மனையில் எழுந்தருளீர் என்றுரைப்பார்
மங்கைப் பருவநல்லாள் மாணிக்க மார்பனுக்குத்
123 தருவோம் விளையாடத் தாம்வருவோம் என்
[றுரைப்பார்
மருளேயுங் கண்மடவார் வாரீர்மனையில் என்பார்
124 இப்படியே மாதர்உள்ளம் இயம்பத் தெருக்கடந்து
செப்பமுடன் வணிகர் பெருஞ் சேனைதளத்துடனே
125 சென்றே கயிலாச நாதர்திருச் சந்நதியில்

நின்று ஆனைவிட்டிறங்கி நீரால் முகங்கழுவி
126 வலப்பிரதட்சண மாய்வந்து திருக்கோயி லுட்போய்
இலக்கம்அறச் சமைத்த இரத்தின மணிப்பதக்கம்
127 கைலாச நாதர் நித்ய கல்யாணி யம்மனுக்கு
பயிலான முத்தாரம் பாங்குடனே தான்சாத்தி
128 குயில்போல் இசைபாடிக் கும்பிட்டு எழுந்திருந்து
மயில்போலும் மங்கையரும் மால்கொளவே
[நீறணிந்து
129 கங்கைச் சடையோனே கைலாச நாயகனே
எங்குலத் தேவந்த ஈசனே எப்பொழுதும்
130 மரபு தனக்கீனம் வாராமல் காரும்என்று
அரவையணிந்தோனை அன்பாகப் போற்றிசெய்தான்
131 அப்போது நான்மறையோர் அழகு கயிலாசருக்கு
செப்பமுடன் சாத்தும் திருமாலை சந்தனமும்
132 திருநீறு மற்ற திருக்கைசிறப் புள்ளதெல்லாம்
தருவாம் வணிகருக்குத் தந்தார் மறையோர்கள்
133 எல்லோர்க்கும் நன்றாய் இவைகள் அளித்தபின்பு
வல்லார்க்கும் வல்லாம் வணிகர் குலத்தீரன்
134 ஆனை மீதேறி அவ்வீதிதான் கடந்து
சேனை தளத்துடனும் செம்பொன் முடியிலங்கத்
135 தந்தகுல வணிகர் தான்நிறையும் வீதிவந்தான்
இந்தை இதழ்முகத்தான் இவ்வீதி வந்திடுங்கால்
136 அன்னை சுற்றம் அத்தனையும் ஆரத்தி தான்எடுத்து
வன்னக் குத்துவிளக்கு வைத்துவா வேற்றூர்கள்
237 அவ்வீதி தான்கடந்து ஆரவா ரத்துடனே
செவ்விமொழி யாளிருக்கும் தெருவீதி தன்னில்
[வந்தான்
238 மாமேருபோல் இலங்க வண்ணப்பூம் பந்தலிட்டுப்
பூமலரா லேசமைத்த பொம்மைகளும் நின்றிலங்க
139 குஞ்சங் கவரியிடக் குத்துவிளக் கேற்றி
வஞ்சியரில் மூத்தோர் வரவேற்று வாழ்த்துரைக்க
140 மங்கையர்கள் மூப்பியர்கள் மைத்துனர்மார்
[எல்லோரும்
தங்கை மணவாளர் தன்னையெதிர் கொண்டு நின்று
141 மாணிக்கம் நீலம் வைரம் வைடூரியமாம்
ஆணிப்பொன் முத்து அவர்கள்கையில் நின்றிலங்க
142 ஆனை மேலிருந்ததங்கள் அரிவை மணவாளரிடம்
மேனிநிறைய அவர் விட்டங்கு எறிந்திடுவார்

143 கற்பூரம் நல்ல களபத்தால் எறிந்திடுவார்
இப்படியே எல்லாரும் எறிந்து விளையாடியபின்
144 ஒப்புடைய நல்வணிகர் உயர்யானை விட்டிறங்கிச்
செப்பமுள்ள மன்னரையும் செல்வரையும்
[முன்னடத்திப்
145 பாடல் முழங்கப் பல்லியங்கள் தான்முழங்க
மாடம் நிறைய வணிகருடன் உட்புகுந்தார்
146 வந்தவுடன் பட்டு வாகாக வேவிரிக்கச்
செந்தமிழ்சே ரும்வணிகர் சிறப்பாய் அமர்ந்தார்
147 அப்போது பெண்ணணங்கை அழகுக் கொருநிலையை
ஒப்பாரும் இல்லாத ஓவியத்து மாதனைய,
148 மங்கைதனை மாமன் நடத்தவல மாகவந்து
தங்கைதனை மணவாளர் தனக்கு வலப் புறமாய்
149 வைத்துமட மங்கையர்கள் வரிசையாய்ச் சுற்றி
[நின்றார்
மெத்தநலம் வேண்டுகின்ற வேள்வணிகர் சூழ்ந்து
[நின்றார்
150 வேழமுகத்து விநாயகனைத் தான் நினைத்து
வாழைக்கனி படைத்து வளமாய்த்தேங் காய்
[உடைத்து
151 ஓமம் வளர்த்தார் உயர்வணிகர் முன்னைத்
தேமருவு நாயகிக்குத் திருப்பூட்டுதற் கிசைந்து
152 சங்கு தவுல் முரசு தவண்டை மள்ளிரிமுழங்க
மங்கையர்தம் நாயகிக்கு மணக்கூறை தான்உடுத்தி
153 மங்கலியம்தன்னை வணிகர் தொட்டுத் தான்
[கொடுத்தார்
செங்கையினால் வாங்கிச் செய்யதிரு மங்கலியம்
154 தரித்தான் கழுத்தில் சால மணவாளன்
தரித்தானே நாயகிக்கு தாட்டிமையாய்த்தான் புகழ
155 எல்லாரும் நன்றாய் இனிதுஊழி வாழ்கஎன்று
பல்லார் மதிக்கப் பாலருக்கும் பைங்கொடிக்கும்
156 அன்புசெறி வணிகர் அரிமணம் இட்டார்கள்
இன்பமுடன் மங்கை இயல்பான லெட்சுமிபோல்
157 பொங்கிக் களிகூர்ந்து புதுமைக் கலன் அணிந்தாள்
தங்கள் குலவணிகர் சாத்திரம்எல் லாம்முடித்து
158 வரிசைச் சிறுமடவாள் வலதுவிரல் கைகோர்த்து
அரசாணிக்காலோடு ஆனதெய்வ வேதிகையை
159 தன்னைவல மாகவந்து தனிவீட்டினுட் புகுந்தார்

வன்னமண வாளருக்கும் மகள்தனக்கும் சீதனங்கள்
160 தம்பிப் பதக்கமுடன் சொர்ணமுத்து மாலைகளும்
செம்பொன் தளப்பன் திருவாழி மோதிரமும்
161 வெள்ளியும் வெண்கலமும் வேணதெல்லாம்
[கொடுத்தார்
வள்ளிமண வாளரைப்போல் மனது மகிழ்ந்திருந்தார்
162 தங்கை மணவாளருக்குத் தமையனார் சீதனமாய்
முன்கைவளையல்நல்ல மோதிரமும் தான்கொடுத்தார்
163 கண்டு மகிழ்ந்துநல்ல கனகமணி மண்டபத்தில்
வண்டுலவு பூஞ்சப்ர மஞ்சத்தின் மேலிருந்தார்
164 துஞ்சும் இருள்நீங்கிச் சூரியரும் தோன்றியபின்
மிஞ்சுபுகழ் வணிகருடன் மேதைத் தமிழ்கேட்டு
165 செந்தமிழ் வாணருக்குத் தேறப்பரிசு அளித்து
ஐந்தருவைப் போலே அடைந்தாரை ஆதரித்து
166 தள்ளாமை சொல்லித் தமிழ்சொல்லிப் பேர்
[சொல்லிக்
கொள்ளவந்தார்க் கெல்லாம் கொடைகொடுத்து
[மீண்டதற்பின்
167 சொந்தமுடை வணிகர் சூழ்ந்திடவே தானிருந்து
வந்ததுரை மக்கள்தமை வழியனுப்பி வைத்தானும்
168 அம்புவியிலே பவிசாய் ஐந்நூற்றுவர் எனவே
இன்பமுடன் எல்லாரும் இனிதாக வாழ்ந்திருந்தார்
169 முடிக்குரிய நல்வணிகர் முன்பாடும் இவ்வாழ்த்தைப்
படிப்போருங் கேட்போரும் பண்புடனே
[வாழ்ந்திடுவார்
170 நூல்போற் பொருள்நிறைந்து நுண்ணறி வாழ்வுதர
ஆல்போல் தழைத்து நகர்அதிபரென வாழ்ந்திருப்பார்

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ
சிவமயம்.

சாத்துக்கவி.

மிதுலைப்பட்டி-குழந்தைவேலுக்கவிராயர்
அவர்கள் குமாரர்

அப்பாவுகவிராசர் அவர்கள் பாடியது.

மன்னர்மன்னர் கொண்டாடும்
விக்கிரமாதித்தன் தன்மனதுபோலச்
சொன்னவரம் அருள்கின்ற
உச்சினி மாகாளியென்னும் தோகைதன்மேல்
பன்னலஞ்சேர் சொற்சொவையும்
பொருள்ச்சேவையும்நன்றாக பார்த்துஆராய்ந்து
நன்னையவான் அழகப்பசெட்டி மைந்தன்
முத்தப்பன்யிக்கும்மியை நவின்றதாமே.

உ
சிவமயம்.

உச்சினிமாகாளியம்மன்பேரில்
கும்மி.

வெண்பா.

உலகீன்ற பார்வதியா ளுச்சினிமா காளிதன்மேற்
கலைமகள்சேர்கும்மிக் கவிபாட—நலமாம்
அரிமருகன் கந்தன்முன்னோ னுலமுண்டோன் சேயன்
கரிமுகவன் றுண்மலரே காப்பு.

கும்மி.

தேவர்கள்போற்றிய உச்சினிமாகாளி
சேயிழைமேற்கும்மிப் பாட்டுரைக்க
மூவர்க்குமேலவ ளுச்சினிப்பிள்ளையார்
முளரித்தாணிதங் காப்பாமே. 1
வாலசவுந்தரி யுச்சினிமாகாளி
மாதங்கிமேற்கும்மிப் பாட்டுரைக்க

நீலகண்டேசர் கயிலாசநாதரும்
நித்யகல்யாணியுங் காப்பாமே. 2
பையரவப்புனை யுச்சினிமாகாளி
பார்வதிமேற்கும்மிப் பாட்டுரைக்க
வையகம்போற்றிய கீறணியூர்முத்து
மாரியம்மாளை மறவேனே. 3
பாமகள்போற்றிய யுச்சினிமாகாளி
பைங்கிளிமேற்கும்மிப் பாட்டுரைக்க
ஆமினியூர் தனில் வந்ததிருமலை
ஆயிபிருபதங் காப்பாமே. 4
தாண்டவமாடிய யுச்சினிமாகாளி
சங்கரிமேற்கும்மிப் பாட்டுரைக்க
பாண்டணிக்காடரென் னையன்செந்தாமறைப்
பாதத்தைச்சென்னியிற் கொள்வேனே. 5
கடுவைத்தகண்டத்தி யுச்சினிமாகாளி
காரணிமேற்கும்மிப் பாட்டுரைக்க
அடுகப்பதியில் வடபத்திரகாளியென்
னம்மனடியிணை காப்பாமே. 6
தலைவியுச்சினி மாகாளிமேற்கும்மித்
தமிழைப்பாடவே காளுட்டில்
துலையானூரினில் வந்தகண்டீசுரர்
சுந்தரிதாணீ தங்காப்பாமே 7
குத்தம்பொருத்தவ ளுச்சினிமாகாளி
கோமளைமேற்கும்மிப் பாட்டுரைக்க
கர்த்தன்பள்ளிவாசல் மேவியேபள்ளிகொள்
காட்டுவாவாசாய்பு காப்பாமே. 8
மைக்கருங்கண்ணா ளுச்சினிமாகாளி
மாதங்கிமேற்கும்மிப் பாட்டுரைக்க
இக்குயர்தோப்புள்ள நெல்லைநகரகத்
தீசர்பதாம்புயங் காப்பாமே 9
கங்கைசடைவைத்த யுச்சினிமாகாளி
காரணிமேற்கும்மிப் பாட்டுரைக்க
சிங்கைநகரில் வளருமழகிய
தேவிசெந்தாமரைத் தாள் துணையே. 10
பங்கயச்சீரடி யுச்சினிமாகாளி
பைங்கிளிமேற்கும்மிப் பாட்டுரைக்க
மங்கைச்சியாச்சி மலையரசியம்மன்
மாமலர்ப்பாதமும் காப்பாமே. 11

சந்தணக்கோதை விசாலாக்ஷிநல்ல
    தையல்முத்தானந்தி காமாக்ஷி
இந்திரசாலமே சுந்தரமேநீங்க
    ளேழெட்டுப்பெண்களும் வாருங்கடி. 12

சித்திரமோகன முத்தாயியடி
    செங்கமலப்பெண்ணே மங்களமே
உத்தமிபத்தினி சித்தினியேநீங்
    ளொன்பது பெண்களும் வாருங்கடி. 13

வேற்படைக்கண்ணி மரகதமேமுத்தி
    வீரிசவுந்தரம் வேலாயி
பார்க்குடச்செல்வி துணைமாலைநீங்கள்
    பத்தெட்டுலைபெண்களும் வாருங்கடி. 14

ரம்மியமாகவே யுச்சினிமாகாளி
    நாரணியாள்செய்த காரியத்தை
கும்மியடிக்க மனமகிழ்ந்தேவந்து
    கூடியபெண்களே கேளுங்கடி. 15

உத்தரதேசத்தில் விக்கிரமாதித்தனு
    முச்சினிப்பட்டணத் துக்குயிராய்
சத்தியந்தப்பாமல் பட்டிமந்திரியுடன்
    சகலபுவனமு மாளையிலே. 16

உச்சினிமாமலை யுச்சியிலேமூல
    உச்சினிப்பிள்ளையார் வீற்றிருக்க
யிச்சையுடனடி வாரத்திலேயெங்க
    ளீஸ்பரிகோவிலில் வீற்றிருந்தாள். 17

வீற்றிருப்பாள்நவ கோணத்திலேயுயர்
    வெள்ளிமலைச்சிவன் தேகத்திலேசிவ
கார்த்திருப்பாளன்ப ருள்ளத்திலேசிவ
    காரணியுச்சினி மாகாளி. 18

இந்துமுடித்திடுஞ் செஞ்சடையாள்நம்பு
    மேழையைக்கார்க்கும் மனமுடையாள்
சுந்தரஞ்சேர்கதலி துடையாளெங்குஞ்
    சூழ்ந்திடும்பூதக் கனபடையாள். 19

வெள்ளிமலையினும் வீடுடையாள்கையில்
    வேதாவின்றலை யோடுடையாள்
துள்ளிவருமொரு மாடுடையாளிரு
    தூயகுழைதனில் தோடுடையாள் 20

பாலப்பிடித்தொரு கோழியன்னம்பேடும்
    படுத்துக்கிடக்கு மொருதோழில்

சாலப்புவிக்கு விருநாளிகெல்க்கொண்டு
    தான்கார்க்கும் முச்சினிமாகாளி. 21
மன்னவனுக்குச்செங் கோல்கொடுத்தாள் கங்கை
    மைந்தனுக்குக்கொங்கைப் பால்கொடுத்தாள்
வன்னக்குகனுக்கு வேல்கொடுத்தாள் சடை
    மகாதேவருக்கு மால்கொடுத்தாள் 22
கஞ்சனைச்சென்னி யுடைத்தவளாம்ஆல
    காலவிஷத்தைக் குடித்தவளாம்
பிஞ்சுமதியை முடித்தவளாம்முனை
    பெற்றிடுஞ்சூலம் பிடித்தவளாம், 23
சேலைப்பழித்த விழியுடையாள்செழுந்
    தேனைப்பழித்த மொழியுடையாள்
மாலைக்குழலிலழி யுடையாளரசன்
    மால்கொழும்உந்திச் சுழியுடையாள். 24
நாகமருளு முழுந்தாளாபகி
    டாசூரன்நெஞ்சைப் பிளந்தாளாம்
ஆகியபங்கய நற்றுளாங்கரை
    யானிடவீட்டில் வளர்ந்தாளாம் 25
அந்தரியுச்சினி மாகாளியிமை
    யாசலராசன் மகவாகும்
சுந்தரமாகிய கல்விதனிலடக்கிச்
    சொல்லவல்லாருண்டோ கல்விகற்றோர். 26
இருக்குமத்தேவியை விக்கிரமாதித்தனும்
    யின்பமுடன்தொழு தேத்திநிற்க
அருட்பிரசாதங் கொடுத்தனள்ராசனுக்கு
    கவதிவராயமே கார்த்துநிற்பாள். 27
கூடுவிட்டுக்கூடு பாயும்வித்தைநெஞ்சிற்
    குறித்தகாரியஞ் செய்யும்வித்தை
தேடும்பொருள்கையிற் சிக்கும்வித்தைமரு
    தேசத்தரசைச் செயிக்கும்வித்தை. 28
வில்வித்தைவாள்வித்தை தெய்வலோகஞ்சென்று
    மீள்வித்தைசர்ப்பன் பாசைவித்தை
கல்வித்தமிழறி விக்கிரமகேசரி
    கர்த்தனுக்கம்மன் றயவுசெய்தாள், 29
மன்னவனுமந்த உச்சினிமாகாளி
    மாதங்கிபாதார விந்தமதில்
நன்னயமாறு காலமும்பூசித்து
    ராச்சியஞ்செங்கோல் நடாத்திவந்தான். 30

காடாறுமாதமும் நாடாறுமாதமுங்
கலந்துராச்சிய பரிபாலனம்
வாடாமல்மன்னவன் ருனுப்ரெண்டாயிரம்
வருஷமாண்டு வந்ததன்மேல். 31
மன்னவனைச்செயம் பண்ணியசாலிய
வாகனராசனும் வந்துதித்தான்
அன்னநாட்டொட்டுத் துரையந்தராச்சிய
மம்மனைப்போற்றி யரசாண்டான் 32
தர்மதுரையான கம்பெனியாரிந்தச்
சத்தசமுத்திரத் தீவுமுதல்
நம்மதென்றேபுவியோ ரெட்டுக்குநல்ல
ராஜரீக்கஞ்செய்யும் நாளையிலே. 33
காசினிதன்னிலே வந்தபெருங்கலி
காலஞ்செய்தவித் தியாசத்தாலும்
தேசங்கள்தன்னில் நடந்தஅன்யாயத்தைச்
செப்பவுநாள்முப் பதுஞ்செலுமே. 34
சோரர்குடிகள் மலிவாச்சுசுத்த
வீரர்குடிகள் மெலிவாச்சு
பாரினிற்கீழவர் மேலானார்வெகு
பண்புள்ளமேலவர் கீழானார். 35
வேசியர்சீவன மேலாச்சுகுடித்
தாசியர்க்குப்பணங் காசாச்சு
மாசற்றவேதியர் வந்தாலுமெதிர்
நீசரொதுக்கங் கிடையாது. 36
வாய்ப்பிரசங்கர்க்குச் செல்காலம்
மரியாதையுள்ளோர்க்கு நிகழ்காலம்
தாய்க்குப்பிள்ளைநிசஞ் சொல்லாது ஞாயம்
யார்க்குந்தான்சொன்னாலும் பொல்லாது. 37
கைக்கூலிசாக்ஷி வளர்ந்தோங்குநிசக்
காரன்வழக்குக் கிடந்தேங்கும்
அக்யானமூடருக் கேக்களிப்பாந்தர்ம
வாசாரயோக்கியர்க் கெமுளிப்பாம். 38
உள்ளந்துணிந்தொரு மேற்குலப்பெண்கட்டிக்
கொள்ளுங்கணவனைக் காணாமல்
கள்ளனைக்கூடிக்கொண் டையங்கண்டேபெற்ற
பிள்ளையைக்கூடக் கழுத்தறுப்பாள். 39
வெற்றிலைக்குத்தகை நெட்டூரமொரு
வெத்திலைக்குத்தெண்டம் பத்துப்பணம்

சுத்தியபோயிலை வாயில்வைத்துக்கொண்டு
சற்றும்வெளிவரப் போகாது. 40
வைக்கிலைப்போலே கிடந்தபுகையிலைக்
கிக்கெடுதலும் வந்ததல்லால்
சக்கரையாச்சுதே பணத்துக்கொருசுமை
விற்கின்றவுப்பும் பொடியாச்சே. 41
தெண்டனைமெத்தவே பண்ணுமுப்பைக்கண்டாற்
கண்டுங்காணமலே செய்தாலும்
பண்டத்தமுத்திரை குத்தாதாருக்குங்
குண்டித்துணியும் பறிபோமே 42
மானமுடையவர் பிரமக்ஷத்திரியர்
வைசியர்சூத்திரர் நால்வகையில்
நானிலத்தேநாலு சாதிநடத்தையை
நாடறியுஞ்சொல்லக் கூடாதே. 43
இப்படியும்புவி வைப்புவரம்புக
ளில்லாமல்செய்த துரோகத்தால்
அப்பணியம்பிகை யுச்சினிமாகாளி
அன்னைகண்டுள்ளஞ் சகியாமல் 44
வெங்கலிகால வித்தியாசத்தாலுமிந்த
மேதினியோர்செய்த தோஷத்தாலும்
சங்கரியுச்சினி மாகாளியிந்தத்
தாரணிமேற்பிர யோகஞ்செய்தாள் 45
கொட்டைகள்பட்டணம் பேருவூருஞ்சில
கொற்றவர்தீவுகள் சிற்றூரும்
நாட்டுநகரிகுடி பட்டிக்காடும்
நாலுமுகமும் வளைந்துகொண்டாள் 46
வேதனெழுத்து முடிந்தோர்க்கும்பட
வேண்டியதுன்ப மடைந்தோர்க்கும்
மாதங்கியுச்சினி மாகாளிசற்றே
வயிற்றிலேதுயர் செய்வாளாம். 47
சும்மாயிருக்கு உதிர்த்திலேவலி
தோன்றியிரைச்சலு மாகிறதாம்
மம்மாவாயிலுஞ் சற்றுவிடத்திலே
வாந்திபிராந்திகள் காண்கிறதாம். 48
நாலுதரம்பேதி யாகிறதாமாகில்
மேலுஞ்சயித்தியந் தோணுறதாம்
காலுங்கையோய்ந்து சுருளுறதாமிரு
கண்ணுமுள்ளாகச் சொருகிறதாம் 49

மந்திரத்தாலேயும் நில்லாதாம்பல
மருந்துமாத்திரை செல்லாதாம்
கந்தரம்பேசாமற் கட்டிடுமாமிரு
கண்ணுலேசீவனை விட்டிடுமாம் 50
மெத்தக்கிளையுள்ளோர் செத்தாலுங்கன
வுத்தியோகஸ்தர் மடிந்தாலும்
அத்தத்தில்மீறினோர் மாண்டாலுமெத்த
அருமதுரைகள் மடிந்தாலும். 51
உற்றசனங்களும் வாராராமந்த
ஊரிறுள்ளோர்வந்து பாராராம்
பெற்றதாய் தோப்பனு மல்லால்வேறு
மற்றொருமானிடர்க் கிட்டாரம் 52
தாய்பிள்ளைவாய்விட் டழுகாராம் உள்ள
சடங்குசாஸ்திரஞ் செய்யாராம்
பாயுடன்கட்டிச் சுருட்டியெடுத்தொரு
பக்கத்திலேகொண்டு போவாராம். 53
கட்டையடுக்கவும் போகாதாம்மேளங்
கொட்டுமுழக்கமு மாகாதாம்
வெட்டித்தரெயிற் புதைத்துப்போட்டுச்சணம்
பொட்டென்றுவீட்டிற்கு மீள்வாராம் 54
மாயும்படிவிதி யுள்ளோர்களுயிர்க்
காயமும்பேதித் திளைப்பாராம்
ஆயிசுவிர்த்தி யுடையோர்கள்பேதி
யாயினுமுள்ளம் பிழைப்பாராம் 55
மாதமொருதரம் தப்பாமல்வட
தேசத்துப்பத்திரிகை வந்திடுமாம்
யீஸ்வரிவந்தவள் நல்லவளாமினி
மேலவர்ப்பட்டவள் தொல்லைக்காரி 56
ஏழுபேரு பிறந்தவளாமதி
லேழுமுகக்காளி வாராளாம்
வாழுமுலகத்தை யாள்கிறதற்குவீர
வசந்தராயரும் வாராராம் 57
கும்பம்வைக்கச்சொல்லிப் பொங்கலிடச்சொல்லிக்
கொட்டுமுழக்கம் முழக்கச்சொல்லி
அம்பலவீதியிற் தோரணங்கள்கட்டி
யலங்காரமெத்தவுஞ் செய்யச்சொல்லி 58
உள்ளூரிலுள்ள கிராமதெய்வங்கட்கு
உள்ளமகிழவே பொங்கலிட்டு

தெள்ளிமை யாய்ச்சோம வாரங்கொண்டாடியே
தேசியர்க்கன்னங் கொடுக்கச்சொல்லி 59
இந்தப்படிக்கி நடந்தோரைவந்த
சுந்தரியாள்குடி காப்பாளென்றும்
நிந்தனையாக நினைந்தோர்க்குவெகு
நெட்டூரியாக யிருப்பாளென்றும் 60
வந்திடும்பத்திரிகை தன்னிலிந்த
வரலாறுகண்டு புவியோர்கள்
அந்தப்படிக்கி நடப்பமென்றுளரி
லனைவோரும்பேசியே யொன்றாகி 61
மந்தையில்தோரணங் கட்டுவாருந்திடல்
மண்வெட்டிபள்ளத்திற் கொட்டுவாரும்
அந்திடத்திற்கூடங் கட்டுவாருங்கோழி
ஆடுகளைப்பலி வெட்டுவாரும் 62
மாறுகொண்டேவழி கூட்டுவாருமங்கே
வாழைக்கமுகுகள் நாட்டுவாரும்
வீறுடனேமலர் சூட்டுவாருமிசை
வீணைகள்தம்பூரு மீட்டுவாரும் 63
கூடத்திலேகும்பம் வைப்பாருமலர்க்
கொண்டுபூப்பந்தல் சமைப்பாரும்
வாடித்தளராமற் கைகோர்த்துக்கொங்கை
மங்கையர்கும்மி யடிப்பாரும் 64
ஊரெல்லாம்பொங்க லிடுவாரும்பார்புக்
குற்றாவுக்கை தொடுவாரும்
பாரெல்லாங்கோல மிடுவாருமதைப்
பார்க்கச்சிலர் வந்திடுவாரும் 65
தாசியர்நாட்டிய மாடுவாருமிசைச்
சங்கீதஞ்சிலர் பாடுவாரும்
ஆசையுடன்சுதி கூட்டுவாருமங்கே
ஆவேசங்கள்வந்து ஆடுவாரும் 66
சங்கீதமேளஞ் சேவிப்பாருமுயர்
சாம்பிராணிதூபங்கள் வைப்பாரும்
செங்கைகட்டிக்கொண்டு நிற்பாரும்பர
தேவதையென்று சேவிப்பாரும் 67
அன்புடன்தேங்கா யுடைப்பாரும்பொங்க
லமுதுதன்னைப் படைப்பாரும்
செம்பொனெடுத்துக் கொடுப்பாருஞ்செல்லுஞ்
சிலவுக்குப்பங்கி யடைப்பாரும் 68

விந்தையாங்கும்பத்தைப் பார்ப்பாருஞ்சென்னி
மீதினிற்செங்கரஞ் சேர்ப்பாரும்
சந்தடிக்குள்ளுடல் வேர்ப்பாருஞ்சிவ
சங்கரிக்குத்தீபம் பார்ப்பாரும் 69
வெண்ணீறுவாங்கியே சாற்றிடுவார்வரும்
வெவ்வினைத்துன்பத்தை மாற்றிடுவார்
கண்ணீறுவாராமற் கார்த்திடுவாயென்று
காரணிபொற்பதம் போற்றிடுவார் 70
அந்தந்தஊருக் கிராமதெய்வங்கட்டு
அன்புடன்பூசை யபிஷேகஞ்
சந்ததமுஞ்செய்து கொண்டாடுமந்தச்
சம்பரமென்சொல்வேன் தோழிப்பெண்ணே 71
நித்தப்படித்தாங் கோவிலுக்குப்பின்னு
மெத்தப்படித்தாஞ் செய்வாராம்
மற்றகிராமத் தெய்வங்களுக்குமாதம்
பத்துத்தர மபிஷேகங்களாம் 72
பூசையில்லாத பழங்கோவிலெல்லாம்
புதிப்பித்துப்பொங்க லிடுவாராம்
வீசுமாந்தளைக் கோவிலெல்லாமெத்த
மெத்தக்கொண்டாடிப் புகழ்வாராம். 73
எண்ணையறியாத தெய்வமெல்லாமினி
யெங்குங்கருத்தது மங்குலைப்போல்
கொண்ணைப்பூக்காணாத் தெய்வமெல்லாம்நறும்
வண்ணமலர்கள் முடித்ததுவாம் 74
வெள்ளைத்துயிலில்லாத் தெய்வமெல்லாநீலப்
புள்ளிப்பட்டாடைத் தரித்ததுவாம்
தள்ளப்படாதமுன் னோடித்தெய்வத்துக்குக்
கள்ளுஞ்சாராயங் குடங்குடமாம். 75
ஆறுமேலாவேஷம் வந்தாலுமந்த
ஊருச்சனங்கள் வளைந்துகொண்டு
காருமம்மா அம்மணியென்று சொல்லியேதிரு
நீறுகள்வாங்கித் தரிப்பாராம். 76
பாணக்கம்நீர்மோ ரிளநீர்மஞ்சள்தண்ணீர்
பாலுடன்பாக்கிலை மஞ்சணையும்
சானித்தியமாய்த்தெய்வ மர்டும்பூமாந்தற்கு
தன்கையினன்பாய்க் கொடுப்பாரும். 77
கட்டிக்கச்சேலையுஞ் சோமன்கொடுப்பாருங்
காணிக்கைபாதத்தில் வைப்பாரும்

கொட்டியதப்புடனே யடுத்தூரினில்
கூட்டிக்கொண்டுவிட்டு மீள்வாராம். 78
அன்னத்தைப்போதப் பொசிப்பதுவுந்தங்க
ளாயிழைமாரைச் சுயிப்பதுவும்
பின்னேடேபார்த்துக் கொள்ளுவோமென்றே
பெரியோர்சிறியோர்க் குறைப்பாராம். 79
இந்தவிதமாக அந்தமாதேவியை
யேற்றியேபோற்றி யனுப்பியபின்
அந்தரியுச்சினி மாகாளித்தாயுமே
நொந்தகண்ணுலாறிக் கொண்டாளாம். 80
எண்ணீரேழாண்டு பூவேற்றுமிந்த
மண்ணில்முன்னேரை வாட்டினதும்
திண்ணமாய்ப்போது மினிநம்மிடபதி
செல்வதுவேதர மென்ருளாம். 81
உச்சினிமாகாளி தாயாருந்தன்
உச்சினிப்பட்டம் போய்ச்சேர்ந்து
இச்சையுடனவள் கோவிலில்வானவ
ரிந்திரன்போற்றவும் வீற்றிருந்தாள். 82
இருக்குமுச்சினி மாகாளியம்பிகை
யீஸ்பரியாளிரு தாண்மலரெ
கருத்தினிலேவைத்துப் போற்றிசெய்தேவருங்
கன்னியரேகும்மி கொட்டுங்கடி. 83
மாதரசியெங்க ளுச்சினிமாகாளி
மாதங்கிமேற்சொன்ன யித்தமிழ்
ஆதரவாகச்சங் கீதத்துடன்கால்வைத்
தாடியேகும்மி யடியுங்கடி. 84
பார்வதியா ளுலகத்தில்நடத்திய
பாங்குகள்தாளெரு பாட்டாச்சே
சீர்வளமாயிந்தப் பாட்டுத்திருந்தவே
செப்பிக்கொண்டாடுங்கள் தோழியரே. 85
பாடிக்கும்மியடிக்கிற பெண்களுக்குப்
பண்பும்பாக்கிய மீய்வாளே
கூடிப்பார்த்து மகிழுவோர்பாடுவோர்
குடிகுறைவாரமற் காப்பாளே. 86
சங்கரியுச்சினி மாகாளிமேலிந்த
தமிழைப்பாடி மனமகிழ்ந்து
மங்கையரெல்லோருங் கும்மியடித்தபின்
வாழிபாடுங்கள் தோழியரே. 87

மூவர்கள்வாழி மறைவாழிமாத
    மூன்றுமழைபெய்ய தான்வாழி
தேவர்கள்வாழி கம்பேனியார்வாழி
    செகம்வாழிநீதிமன் வாழியவே. 88
சிவசகாயப்பெருஞ் சிவகங்கையின்
    சீர்மையொரு குடைக்குள்ளாளும்
கெவுரிவல்லவ ராசராசேந்திர
    கேசரிசெங்கோன் மிகவாழி 89
அக்தனியம்பிகை மாமலையத்துவஜ
    னருளும்ராச குமாரிமின்னாள்
முக்கனியுச்சினி மாகாளிமேற்செட்டி
    முத்தய்யன்சொல்தமிழ் வாழியவே.

உச்சினிமாகாளியம்மன் கும்மி.

முற்றுப்பெற்றது.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112717
MADRAS

யுனைட்டெட் பிரிண்டர்ஸ், காரைக்குடி.

20A
5-9